Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ சித்திரை மீ 26 ஆம் உ புதன்கிழமை (09 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 13 ஓசை 80

## ஒரு லட்சம் தோட்டத் தமிழ் தொழிலாளரை ஏற்கமுடியாது

-கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் உள்ள சுமார் ஒருலட்சம் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களை இலங்கை அரசு கேட்டதுபோல தற்போதுள்ள நிலையில் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மார்க்ஸிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. டபிள்யூ.ஆர். வரதராசன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு முதலமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

தற்போது தமிழகம் வந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால்தான் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரை அழைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

## "சாம் விட்ட பணியை நாம் தொடருவோம்"

-யோகசங்கரி

(கொழும்பு)

''எங்கள் நண்பர் சாம் தம்பிமுத்து அவர்களைத் கொலை செய்தது யார் என்பது எங்களுக்குத் தெரியும் இதுபோன்ற கொலைகளும் கொலைப் பயமுறுத்தலும் தொடருமானால் நாம் நமது சொந்தப் பாதுகாப்புக் கான வழிவகைகளை நாமே தேடிக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்'' என்று யாழ் மாவட்ட ஈ. பி. ஆர். எல். எவ் (தமிழர் விடுதலைக் கூட்டணி) திரு. கே. யோகசங்கரி தெரிவித்தார்.

அரசாங்கம் தகுந்தபாதுகாப்பளிக்கத் தவறுமானால் நாமே நமது பாதுகாப்புக்கான வழிகளைத் தேட வேண்டியேற்படுமென்றும் திரு. யோகசங்கரி சொன்னார்

(6ஆம் பக்கம் பார்க்க

## சாம் தம்பிமுத்து கொலைக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

- பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாம் தம்பிமுத்து படுகொலை செய்யப்பட்டதற்கும் எமது இயக்கத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென தமிழீழவிடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமாலை யாழ்ப்பாணம் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாம் தம்பிமுத்து கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதுவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் இது சம்பந்தமாக ஈ பி.ஆர். எல்.எவ். தலைவர்கள் எம்மீது பழிசுமத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

## தமிழ் எம். பிக்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

தமிழ் எம்.பிக்களின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கின்றது. இவர்களின் பாதுகாப்பிற்கான பொறுப்பு பொலிஸ்மா அதிபரிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது இதனைத் தொடர்ந்து தமிழ் எம். பிக்களின் பாதுகாப்பிற்கென ஒரு குழுவை பொலிஸ்மா அதிபர் நியமித்திருக்கிறார்.

நேற்றைய மந்திரிசபைக் கூட்டத்தின் பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான திரு. ரஞ்சன் விஜேரத்தினா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் தனியார் வீடுகளில் வெளியில் இருந்து வந்து தங்கியிருப்பவர்கள் பற்றி வீட்டுக்காரரர் எச்சரிக்கையாக இருக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## சனசமூக நிலையங்களின் பொதுக்கூட்டம்

(விசேடநிருபர்)

நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாச இடைக்கால விசேட பொதுக்கூட்டம் தலைவர் திரு. கோ. தியாகராசா தலைமையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேசசபை ஆணையாளர் திரு சடாட்சரசண்முகதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம்,

(6ஆம் பக்சம் பார்க்க)

# "ஒப்பந்தங்கள் செல்லாதவை நாடுகடத்துவதை நிறுத்துக"

## இந்தியாவிற்கு 3000 மில். ரூபா செலவு!

(புதுடில்லி)

இலங்கையில் இரண்டரை ஆண்டுகளாக இந்திய அமைதிப்படை இருந்ததன் காரணமாக, இந்திய அரசாங்கத்திற்கு சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபா செலவாகியுள்ளது என இந்தியாவின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## நேர்முகப் பரீட்சைக்கு சிங்களத்தில் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவி

தமிழ்மொழி அமுலாக்கல்குறித்து கண்டிப்பான உத்தரவு

## விடுதலைப் புலிகள் கண்டன அறிக்கை

"ஒரு இலட்சம் மலையகம் வாழ் தமிழ் மக்களை கட்டாயமாக நாடு கடத்த இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு பலத்த ஆட்சேபமும், கண்டனமும் தெரிவிக்கின்றோம்''

## யாழ். செயலகத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

வின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## நேர்முகப் பரீட்சைக்கு சிங்களத்தில் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைஉத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு சிங்களமொழி மூலம் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா தமிழ்மொழி அமுலாக்கல்குறித்து கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தும் இவ்வாறு சிங்களத்தில் கடிதங்கள் வருவது குறித்து தமிழ் ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடிதங்களைக் கொண்டு தமிழ் சிங்களமொழி பெயர்ப்பாளர்களிடம் அலைந்து திரிகின்றன.

## விடுதலைப் புலிகள் கண்டன அறிக்கை

"ஒரு இலட்சம் மலையகம் வாழ் தமிழ் மக்களை கட்டாயமாக நாடு கடத்த இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு பலத்த ஆட்சேபமும், கண்டனமும் தெரிவிக்கின்றோம்'' என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நேற்று மாலை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கையில் எஞ்சியிருக்கும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை உடன் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜெரட்னாவின் கருத்திற்கே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் இவ் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ் அறிக்கையில் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் இலங்கையின் குடிமக்களே. இவர்கள் அனைவருக்கும் இந்நாட்டின் குடியுரிமை உடனடியாக வழங்கப்பட வேண்டும். இவர்களின் ஒரு பகுதியினரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும் திட்டத்தை இலங்கை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

மலையகத்தில் இன்று வாழ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு பெருந்தொகை விண்ணப்பங்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன இவ்விண்ணப்பங்கள் யாவும் பெற்றுகொள்ளப்பட்டு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவது வரைக்கும் ஒழுங்காக வேலைகள் நடைபெறுகிறது.

ஆனால் இன்றுவரைக்கும் நான்கு நாட்களுக்குள் பதில் கிடைக்கும் என அறிவித்திருந்த எந்த கடவுச் சீட்டுகளும் மக்களை வந்தடையவில்லை இருந்தும் மக்கள் தொடர்ந்து விண்ணப்பித்த வண்ணம் இருப்பது வியப்பிற்குரியதாகும் என அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். (லோ)

## சிபார்சு செய்வோர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

\- லலித்

அரசாங்கத்துறைகளில் இனிமேல் சகல ஆட்சேர்ப்புகளும், பதவி உயர்வுகளும் திறமை அடிப்படையிலும் இனவிகிதாசாரத்துக்கு அமையவே வழங்கப்படவுள்ளது. என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

மாவட்ட நியமனங்களும் அந்தந்த மாவட்டங்களில் உள்ளஇனவிகிதாசாரப்படியே நடைபெறும் என்றும் அவர் சொன்னார்,

மாகாணமட்டத்தில் இந்த அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் போராளிகளினது முகாம்கள் தமிழ் நாட்டில் இல்லை

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதாக கூறப்படுவது முற்றிலும் தவறு தமிழ் நாட்டில் எந்தவொரு இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் முகாம்கள் இல்லை. அப்படி முகாம் அமைத்த சில போராளிக் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள கடல் பகுதியில் கடல் எல்லையை குறிப்பதற்கு கடற்படையும், கடலோர காவல் படை பிரிவும் இங்கு நிறுத்தப்பட வேண்டும் என மத்திய அரசிடம் கேட்டுள்ளோம் எனவும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் கேட்ட கேள்விகளுக்கு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி சட்டப்பேரவையில் பதிலளித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் சட்டசபை உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் தமிழ் நாட்டின் கடல் பிரதேசத்தை சுற்றி நேரடியா

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்து மாணவர் இரத்ததானம்

செஞ்சிலுவை சங்க தினத்தை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியின் செஞ்சிலுவை சங்க பிரிவின் தலைமையில் பெருமளவும் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் மனமுவந்து இரத்ததானம் செய்தனர்.

## வவுனியாவில் மாணவர் இரத்ததானம்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் நேற்று செவ்வாய்க்கிழமை நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இரத்ததானம் செய்தார்கள்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளை அதிகாரிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி இரத்ததானம் வழங்கல் நிகழ்ச்சியில் பாடசாலை ஆசிரியர்களும் கலந்துகொண்டு இரத்தம் வழங்கினார்கள்.

ஓமந்தைமகாவித்தியாலயம், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் மாணவ, மாணவிகள் இந்த இரத்ததானம் வழங்கலில் கலந்துகொண்டனர்.

நேற்றுற்காலை (08-05-90) 8.30 மணியளவில் மேற்படி இரத்ததானம் வழங்கல் நிகழ்ச்சி ஆரம்பமானது. (தி)

## மட்டக்களப்பு பஸ் ஊழியர் திடீர்வேலைநிறுத்தம்

(கோட்டமுனை)

மட்டக்களப்பு டிப்போ ஊழியர்கள் சம்பளம் வழங்கப்படாமையினால் பஸ் சேவைகளை நேற்று மாலை 5 மணியுடன் நிறுத்தினர் இதனால்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான ஊர்வலம் ரத்து வெசாக் பெரகரா நடைபெறும்

(வவுனியா)

அநுராதபுரத்தில் இருந்து வவுனியாவிற்கு மேற்கொள்ளவிருந்த சமாதான ஊர்வலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி வவுனியா பௌத்த விகாரையின் பீடாதிபதி சிகாம்பெல விமல தேரோவினாலும், இராணுவத் தளபதி பலாமி குலதுங்காவினாலும் இப்பாத யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் இவ் சமாதான ஊர்வலத்திற்கு சர்வோதய தலைவரும் கலந்து கொள்வதாக இருந்தது,

இவர்களின் இப்பாத யாத்திரையானது தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடை செய்யப்பட்டது.

ஆனால் வெசாக் தினத்தையொட்டி வவுனியாவில் பெரசரா நடத்துவதற்குஅனுமதிக்கப்பட்டுள்ளது. (தி)

## சாம் கொலை - சுட்டவர்களை அடையாளம் காட்டுவார்களாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் சாம் தம்பிமுத்து கொலை தொடர்பாக பல தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

திரு சாம் தம்பிமுத்துவைச் சுட்ட நபர்களை அடையாளம் காட்ட முடியுமென்று சம்பவத்தை நேரில் பார்த்த இருவர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்கள் என்று பொலிஸ் மா அதிபர் ஏ. நே. எஸ் பெரேரா நேற்று நிருபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட மோட்டார்ச் சைக்கிளின் இலக்கம் பிழையானது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

இந்த இலக்கத்தையுடைய மோட்டார்ச் சைக்கிள் பஞ்சிகாவத்தையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டது. ஆனால் இந்த மோட்டார்ச் சைக்கிள் பலமாதங்களாகப் பயன்படுத்தவில்லை எனத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனசக்தி திட்டத்தின் மூலம் கூட்டுறவுத்துறை பலம் பெற்றது

(கொழும்பு)

ஜனசக்தி திட்டத்தின்மூலம் நாட்டின் கூட்டுறவுத்துறை பலம் பொருந்தி விளங்குவதாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் கூட்டுறவுத்துறையின் மாதாந்த வருமானம் முப்பது கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் முதல் இதுவரை நாற்பத்தேழு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும், மூன்று பாவனையாளர் சங்கங்களும் இவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளன

(6ஆம் பக்கம் பார்க்க)

## நகர்ப்புற வீடமைப்புக்கடன் பதிவு வேலைகள் முடிவு

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு கடனுக்கான பதிவு வேலைகளில் நகர்ப்புற வீடமைப்பு திட்டப்பதிவு வேலைகள் முடிவடைந்துள்ளது. கிராமிய மட்ட கிராமியக்கடன் வழங்குவதற்கான பதிவுசெய்யும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகிறது என யாழ்ப்பாணம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் தெரிவிக்கிறார்.

பதினைந்துலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் 1990 ஆம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - ஹமீத் அடுத்தவாரம் சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

மருத்துவ சோதனைக்காக தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த மாதம் 30ஆம் திகதி லண்டன் சென்றுள்ள நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸீ. எஸ். ஹமீத் அவர்கள் இவ்வாரம் நாடு திரும்பவுள்ளார்.

அடுத்த வாரத்தில் விடுதலைப்புலிகளின் உயர்மட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கென அமைச்சர் ஜனாப் ஏ. ஸீ. எஸ். ஹமீத் அவர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

கடந்த மாதம் 13ஆம்திகதி யாழ்ப்பாணத்தில் தமிழீழ வீடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அமைச்சர் ஹமீத்தும் நல்லூரில் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

## சிறுமி பலி

(வவுனியா)

மகாறம்பைக்குளத்தில் கிணற்றுக்குள் விழுந்து சிறுமி ஒருத்தி பலியானார், இச் சம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப்படையுடன் மோதி இறந்தவேங்கைகளுக்கு அஞ்சலி

(பருத்தித்துறை)

இந்திய இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் தலைவிரித்தாடிய போது இந்திய இராணுவத்தினரைஎதிர்த்துப் போரிட்டுவீர மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பருத்தித்துறை பிரதேசப் பொறுப்பாளர் இளம் புலி கப்டன் மொறிஸ், லெப்டினன் றம்போ இளம்புலி ஸ்ரீ ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் பருத்தித்துறை மருதடிவயிரவர்ஆலய அருகாமையில் (பஸ் டிப்போ முன்னால்) நடைபெற்றது.

பருத்தித்துறை வர்த்தகர் திரு.எம். இரத்தினசோதிஇவ் அஞ்சலிக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். வீரமரணமடைந்த இலட்சிய வேங்கைகளின் பெற்றோர்கள் விளக்கேற்றி அஞ்சலிக் கூட்டத்தைஆரம்பித்துவைத்தனர்.

இவ் அஞ்சலிக்கூட்டத்திலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சிப்பகுதிமக்கள்முன்னணி இணைப்பாளர் திரு.குணம், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க மகளிர் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் செல்வி லூசியா, விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி முக்கியஸ்தர் திரு. எஸ். அரசலிங்கம், திரு எஸ், திருநாவுக்கரசுமுதலி' திருமதி. ஈஸ்வரி ஆகியோர் அஞ்சலிஉரைகளைவழங்கினர் செல்வி. இராஜேஸ் கவிதாஞ்சலி நிகழ்த்தினார் செல்வன் மகேஸ்வரன்.திவாகரன் (கண்ணன்) நன்றியுரை வழங்கினார். (25)

# 68 வயதில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் 90 வயதில் ஓய்வூதியம் பெற்றுள்ளார்

(கண்டி)

கண்டியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் கடமையிலிருந்து இளைப்பாறி 22 வருடங்களுக்குப் பிறகு திரட்டிய ஓய்வூதியச் சம்பளமாக 172,000 ரூபாவுக்குக் காசோலை ஒன்றைப் பெற்றுப் பதின்மூன்றாம் நாள் காலமானார்.

68 வயதில் இளைப்பாறிய ஆர். பாபானிஸ் என்ற இந்த ஆசிரியர் 90 வயதில் ஓய்வூதியப் பணத்தைப் பெற்றார். ஓய்வூதியம் பெற்று பதின்மூன்றாம் நாள் மரணமானார்.

ஓய்வூதிய ஆணையாளருக்கு இவர் எழுதிய கடிதத்தில் ஓய்வூதியம் தனக்குக் கிடைத்ததையிட்டு தான் சந்தோஷமடைவதோடு, இப் பணம் கிடைத்ததால் தனது பளு குறைந்துள்ளதாகவும், இனிமேல் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் தாமதமேற்படக்கூடாதென்றும் குறிப்பிட்டிருந்தார்.

1968இல் இளைப்பாறிய இவ்வாசிரியர், இவ்வாண்டு ஏப்ரல் 16ஆம் திகதி ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெற்று ஏப்ரல் 29ஆம் திகதி மரணமானார்.

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக ஆசிரியர் சமர்ப்பித்த படிவங்களில் முரணான தகவல்கள் வழங்கப்பட்டதாலே ஓய்வூதியம் வழங்குவதில் இத்தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி

(யாழ் விளையாட்டுநிருபர்)

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அண்மையில் நடத்திய வருடாந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றியோரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 13 பேர் சித்தி எய்தினர்

அவர்களது விபரம் பின்வருமாறு திருவாளர்கள் கே.புவேந்திரராஜா எஸ் வைத்தீஸ்வரன் கே.தேவதாஸ் எஸ்.நரேந்திரநாதன், கே.எஸ்.குணசிங்கம், ஜி.கணேஸ்வரநாதன், ரி.றொபேர்ட்,எஸ்.தவராசா, ரி.கருணாகரன், எஸ்.மசேந்திரன்,எஸ்.ஜி.மரியதாஸ், எஸ் ரி. கணேசலிங்கம்,எஸ். அண்ணாத்துரை.

பதுளை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மூன்று இடங்களில் செய்முறைப்பரீட்சைகள் நடைபெற்றன. (42)

# கட்டணம் செலுத்தாத தொலைபேசிகள் மூன்று மாதங்களால் துண்டிக்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்முனை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் கீழ் உள்ள தொலைபேசி பாவனையாளர்களில் 3 மாதத்திற்கு மேல் கட்டணம் செலுத்தத் தவறியுள்ள பாவனையாளர்களின் தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை பிராந்திய தொலைத் தொடர்புகள் பொறியியலாளர் திரு. பி. ராஜேஸ்வரன் ''ஈழநாதத்'' துக்குத் தெரிவித்தார்.

கடந்த மூன்றுமாத காலமாக 5000 ரூபாவுக்கு மேல் கட்டணம் நிலுவையாகவுள்ளவர்களின் தொலைபேசி தான் முதற்கட்டமாக மூன்றரை மாதகால அவகாசம் வழங்கி துண்டிக்கப்படுகிறது.

முதல் இருவாரங்கள் இருவழிகளில் ஒருவழி ( In comming ) மட்டும் செயல்படுவதன் மூலம் முன் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

ஒரு மாதத்திற்குள் கட்டணம் செலுத்தத் தவறினால் இருவழிகளிலும் துண்டிக்கப்படும். மேலும் ஒரு மாதம் அவகாசம் வழங்கப்படும். இல்லையேல் முற்றாக இணைப்பு ரத்துசெய்யப்பட்டு புதியவிண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

துண்டிக்கப்பட்டவர்க்கு இதுபற்றி மேலும் ஒருமாதம் அவகாசம் உண்டு. அதற்குள் அவர் பெறவிரும்பினால் நிலுவையுடன் 5000 ரூபா அபராதமும் செலுத்தவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 145 தொலைபேசி பாவனையாளர்கள் 12 இலட்சம் ரூபாவரை செலுத்தவேண்டும்

ஆகக் கூடிய தொகை வந்தாறுமுலை வர்த்தகரொருவர் 23,832ரூபா 10சதமாகும்.

கல்முனையில் சட்டத்தரணி ஒருவர் 30,965 ரூபா 20 சதம் நிந்தவூர் அரிசி ஆலை வர்த்தகர் 49,632 ரூபா உட்பட 185 பேர் சுமார் 21 இலட்சம் ரூபா செலுத்தவேண்டும் என்றார். (37)

# வடமராட்சியில் சில பகுதி பாடசாலைகளில்மதியஉணவு இல்லை

வடமராட்சிப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்படுவதில்லைஎன மாணவர்களும்,பெற்றோர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.கல்விப் பணிப்பாளர் மாணவர்களின் மதியபோசனம் பற்றிய கண்டிப்பான உத்தரவுகளை வழங்கியும் சில பாடசாலைகள் ஏன் கல்விப் பணிப்பாளரின் உத்தரவுகளை உதாசீனம் செய்கின்றன எனக் கேட்கிறார்கள்? மதியபோசனம் வழங்கப் படாத பாடசாலைகளில் மாணவர்களின் பாதிப்பை நீக்குமுகமாகமதிய போசனத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (15)


## இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

## தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

1) பின்வரும் காலங்களில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களிற் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்க எமது இராஜாங்க அமைச்சரின் அலுவலக தமிழ் அலுவல்கள் பிரிவு முடிவு செய்துள்ளது.

(1) 1981 முதல் 1988ஆம் ஆண்டின் முடிவு வரையான காலப் பகுதி (இது ஒரு காலப் பகுதியாகக் கருதப்படும்.)

(2) 1989 ஆம் ஆண்டு

2) கீழ்க்கண்ட துறை சார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.



## லிகிதர் தேவை

யாழ் வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம்.

மேற்படி சங்கத்திற்கு ஒரு லிகிதர் வேண்டும். கல்வித் திறமை, முன் அனுபவம் முதலியவற்றுடன் 15. 5. 90 ஆம் திகதிக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்



## இலங்கைச் சுங்க அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டம்

## சுங்க விற்பனை 1 | 90

பொருட்களுக்கான கூறுவிலை கோரல்

விற்பனைக்கான கீழ்வரும் பொருட்கள் பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வகைப் பொருட்களுக்கான கிலோ ஒன்றின் அல்லது பொருள் ஒன்றின் விலைக் கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சுங்க விற்பனை 1 / 90 எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் 16 . 05 . 90 அன்று புதன்கிழமை காலை 10.00 மணிவரை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். இங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் 18.05.90 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வருகை தந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகள் பிரித்துப் பரிசீலிக்கப்படும். வருகை தரமுடியாத கேள்வினர் எழுத்துமூலம் தமது பிரதிகளை நியமிப்பின் எனது அனுமதியுடன் அவர்கள் அலுவலகத்தில் சமுகமளிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதியுயர்ந்த விலைக்கான கேள்வி ஏற்றுக்கொள்ளுமிடத்து கேள்விக்குரியவர் முழுப் பொருட்களுக்கான மொத்த விலைத் தொகையை வங்கி உத்தரவாதவோலை (Bank Draft) மூலம் மூன்று நாட்களுக்குள் செலுத்தவேண்டும். இதன்பின் தீர்மானிக்கப்பட்ட திகதியில் விற்பனைக்கான பொருட்கள் யாவும் காங்கேசன்துறை இறங்குதுறையிலிருந்து விநியோகிக்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசகுடியரசு வர்த்தமானி இலக்கம்291(1984.03.30 இல் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் பிர



## யாழ்நகரில் இன்றைய சினிமா

### மனோகரா - (யாழ்)

தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-45, 700 & 945
DAVID WARBECK IN
THE HUNTERS OF THE GOLDEN COBRA

### வெலிங்டன் (யாழ்)

ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30,2-30, 6-30,9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

### லிடோ (யாழ்)

தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
16 வயதினிலே
(B/860)

### ஹரன் - யாழ்

தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
''நாயகன்''
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 887

### நியூ சாந்தி (யாழ்)

தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

### வின்ஸர் - யாழ்

தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30

2) கிழ்க்கண்ட துறை சார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

(i) நாவல் (ii) சிறுகதை (iii) நாடகம்
(iv) கவிதை (v) இலக்கியத் திறனாய்வும் விமரிசனமும் (vi) சிறுவர் இலக்கியம்
(vii) சமூகவியலும் மானிடவியலும் (viii) அறிவியல்
(ix) ஏனையவை

3) நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4) இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும்,எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும். செயலாளரின் முடிவே இறுதியும் முடிவுமானது

5) மேற்குறித்த காலங்களில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூல் ஆசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ, நேரடியாகவோ 21.05.90 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பணிப்பாளர்,
தமிழ் அலுவல்கள் பிரிவு,
இந்துசமய கலாசார இராஜாங்க
அமைச்சரின் அலுவலகம்,
9வது மாடி, 'ரக்ஷண மந்திரய'
21, வொக்ஷால் வீதி, கொழும்பு - 02.

6) நூல்களை அனுப்பும் உறையின் இடதுபுற மூலையில் 'தமிழ் நூற் பரிசுத்தேர்வு' என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

7) இராஜாங்க அமைச்சரின் அலுவலக தமிழ் அலுவல்கள் பிரிவினால் 1990 ஜுலை மாதத்தில் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கியப் பெரு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

கே. சி. லோகேஸ்வரன்,
செயலாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சரின்
அலுவலகர்.

கொழும்பு-02
4.5.1990

B 644

---


15. 5. 90 ஆம் திகதிக்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்
யாழ். வர்த்தகர் சங்கம்
இல. 282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B.651)

---

# இரண்டாம் ஆண்டு
# நினைவஞ்சலி



## கனகரத்தினம் ஜெகதீஸ்வரன்
(ஜெகன்)

(யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்)

மலர்வு: **27. 11. 1970**
உதிர்வு: **9. 5. 1988**

ஜெகன் யெகம்விட்டு மறைந்து
ஈராண்டும் நிறைந்ததுவோ?
இன்று நீர் இருந்தது போலொரு
இதயநிறைவிருக்கு எம் மனதில்!
நீரிறந்தீர் என்று எண்ணமுடியவில்லை,
நெஞ்சகத்துள் நிறைந்திருந்து
நித்தமும் நீர் எம்மோடு
நினைவுகளில் வாழ்ந்திருப்பீர்!

பெற்றோர்: கனகரத்தினம் - கலாவதி,
சகோதர சகோதரிகள்: விஜித்தா, பாலேந்திரன், திருமதி. சசி சிறிதரன்
மருமகன்: செந்தூரன் மற்றும் உற்றார்,உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: பொ. கனகரத்தினம்
இல. 441, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(R.442)

---

யோகிச்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசகுடியரசு வர்த்தமானி இலக்கம்291(1984.03.30 இல் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

| பொருள் விபரம் | | தொகை |
|---|---|---|
| (1) கராம்பு ( Cloves) | | 1746.5 கிலோ |
| (2) பழைய செம்புப் பொருட்கள் (Copper) | | 496 கிலோ |
| (3) சாதிக்காய்ப் பூ | (Nutmeg Flower) | 106 கிலோ |

குறிப்பு: இவை பற்றிய மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட சுங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சுங்க அத்தியட்சகர்.
யாழ். மாவட்ட சுங்கப் பணிப்பாளருக்காக.

N / Prev / Sale / 90
சுங்க அலுவலகம்,
601/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B 643)

---


# கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programing in Basic Language**

ஆரம்பம்: **12th May, 1990**
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
நேரம்: **1-30** p. m.

**LOTUS 1-2-3**
ஆரம்பம்: 5th May, 1990
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்,




**UNIKCO COMPUTER CENTRE**
No: 5, Power House Road,
2nd Lane,
JAFFNA.

B.631


---


தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30,2.30,6.30,10.30
ரஜனி ஸ்ரீதேவி நடித்த
**மூன்றுமுடிச்சு**
அடுத்த வெளியீடு
மௌனராகம்


---

## இரு ஆஸ்பத்திரிக்கு ஒரேஒரு வைத்தியர்

(வந்தாறுமூலை)

செங்கலடி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஒரு வைத்தியரே புல்லுமலை அரசினர் வைத்தியசாலையையும் கவனித்து வருகிறார்.

திங்கள், புதன், வெள்ளி, ஆகிய தினங்களில்புல்லுமலை வைத்திய சாலைக்கு கடமை ஆற்ற செல்வதால் அத்தினங்களில் செங்கலடி வைத்திய சாலையில் வைத்தியர் இன்மையால்மக்கள்பெரும் கஸ்ரத்தை அனுபவித்து வருகின்றனர்.

எனவே இக் கஸ்ரத்தை போக்க மாவட்ட வைத்திய அதிகாரிநடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் பல தடவைகள் புகார் செய்தும் இது வகை எதுவித நடவடிக்கையும் எடுரகப்படவில்லை. (29)

## வீதியின் அவலம்

(வந்தாறுமூலை)

ஓட்ட மாவடி பாலத்தில் இருந்து கடவத்தை மடுவரையும் உள்ள தமிழ் பகுதிக்குட்பட்ட பொலநறுவை வீதி இதுவரையும் எதுவித பராமரிப்பும் இன்றி குன்றும் குழியுமாக காணப்பகிறது.

எனவே இந்த வீதி திருத்தத்தினை மேற்கொள்ள மட்டக்களப்பு வீதித் திருத்த அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (29)

# ஸ்ரீநகரில் பொது வேலை நிறுத்தம்

## கடைகள் திறக்கவில்லை; வாகனங்கள் ஓடவில்லை!

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் மாநிலமான ஜம்மு காஷ்மீரில் கோடைக் கால தலைநகரான ஸ்ரீநகரில் வேலை நிறுத்தம் நடைபெற்றது.

இவ் வேலைநிறுத்தத்தை இந்திய எதிர்ப்பு இயக்கமான ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

இங்கு கடைகள் மூடப்பட்டிருந்தன. தனியார் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடவில்லை. ஆனால் அதிகாரபூர்வமான வாகனங்களே பலத்த காவலுடன் வீதிகளில் ஓடின.

குளிர்காலத்தில் ஜம்முகாஷ்மீரிலும், கோடை காலத்தில் ஸ்ரீநகரிலும் அரசாங்கஅலுவல்கள் வேலைகள் நடைபெறும்.

இப்போது கோடை காலத்திற்கு ஏற்ப ஸ்ரீ நகரில் வேலைக்கு வரும் பல்லாயிரக் கணக்கான அரசாங்க, மற்றும் ஏனைய வேலையாட்கள் இவ் வேலை நிறுத்தத்தினால் பெரும் பாதிப்பினை அடைந்திருக்கிறார்கள்.

மேலும் சில அரசாங்கஉத்தியோகத்தர்கள் குடும்பங்களை விட்டு தனியாக ஸ்ரீநகருக்கு வந்து வேலைசெய்கிறார்கள்.

இதேவேளை ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநர் ஜக் மோகன் ''ஜம்முவிலிருந்து அரசுத் தலைமைச் செயலகத்தையும் இதர அரச அலுவலகங்களையும் ஸ்ரீநகருக்கு மாற்றியிருப்பது மாநிலத்தில் நிலைமையை இயல்பாக்குவதற்கானபுதியகட்டமாகதிகழும்'' எனக் கூறியிருக்கிறார்,

தீவிரவாதத்தை வேருடன் களைவது மட்டுமல்ல ஏழ்மை பின்தங்கி இருப்பது மற்றும் மாநிலத்தின் பொருளாதார நிர்வாக அநீதிகளையும் எதிர்த்துப்போராடவேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டுமென செயலகர்களுக்கும் இலாக்காக்களின் தலைமை அதிகாரிகளுக்கும் எழுதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அதே சமயம் ஜம்மு காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாதிகள் மக்கள் தமக்கு அளித்த ஆதரவுக்கு அதாவது வேலை நிறுத்தத்தின் வெற்றிக்கு ஆதரவு அளித்தமைக்கு தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இனவெறிக்கு எதிர் ஆர்ப்பாட்டம்; பொலிஸ் சூட்டதில் 5 பேர் பலி!

(யோசன்பேர்க்)

தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்மேல் சென்ற மாதம் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஐந்து கறுப்பின இளைஞர்களின் சடலங்கள் கடந்த சனியன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு புதைக்கப்பட்டன.

பிரேத ஊர்வலத்தில் கலந்துகொண்ட 5000 க்கும் அதிகமானவர் 'மக்களுக்கு அதிகாரங்களை வழங்கு' என்று கோஷித்தனர்.

பிரேதப் பெட்டிகளை ஆபிரிக்க தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் தாங்கிச் சென்றனர். தேசிய காங்கிரசின் நிறங்களான பச்சை, கறுப்பு, பொன்னிற வர்ணங்கள் பெட்டிக்குப் பூசப்பட்டிருந்தன.

யோசன்பேர்க்கிற்கு 120 மைல்களுக்கு அப்பாலுள்ள சவுச்சாலைக்கு பிரேதங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. வெள்ளைக்காரப் பொலிஸார் வீதிகளில் நின்றார்கள் என்றாலும் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லையாம்.

## ஸ்ரீராமர் ஆலய அடிக்கல்விழா இந்துக்கள் 150 பேர் கைது!

(கான்பூர்)

இந்தியாவின் வட மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியா நகரில் 150 இந்துக்கள் மாநில பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

முஸ்லிம்களுடன் தகராறுக்குள்ளான பிரதேசத்தில் ஸ்ரீ ராமஜென்ம பூமியான அயோத்தியில் கோயில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுவதற்கான விழாவில் மக்கள் திரண்டிருந்த சமயமே இவ் கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு முன்னதாக சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் இங்கு நிகழ்ந்த அடிக்கல் நாட்டு வைபவத்தில் பல இந்திய நகரங்களில் மோதல்கள் ஏற்பட்டது. இந்த மோதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு அயோத்தியா நகரில் அடிக்கல் நாட்டும் வைபவத்தை மேற்கொண்டவர்கள் துவாரகாபீடசங்கராச்சாரியார் சொரூபானந்த சுவாமியின் ஆதரவாளர்களே. இச் சுவாமியார் இப்போது சிறையில் உள்ளார். இவரை விடுதலை செய்யும்படி மாநில மற்றும் மத்திய அரசாங்க முக்கிய உறுப்பினர்களுக்கு முறைப்பாடு சென்று கொண்டிருக்கிறது.

### விமானம் விழுந்து நொருங்கி 17 பேர் பலி:

(கௌதமாலா)

கௌதமாலா நகரத்தில் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில்17 பேர் கொல்லப் பட்டனர்.

இவ்விபத்தானது நெருங்கிய வீடுகள் இருந்த பகுதியில் இடம்பெற்றது. இறந்தவர்களி ் ஐந்துசிறுவர்களும்அடங்குவர்.

மேலும் இவ்விபத்தில் ஐந்து சேரிகள் முற்றாக எரிந்துள்ளன.விமான ஓட்டிகள் மூவருடன் எரியுண்ட வீடு ஒன்றில் பகல் உணவை அருந்திக் கொண்டிருந்த முழுக் குடும்பமும் கொல்லப் பட்டனர்.

## விமானம் தீப்பிடித்து எரிந்தது; பயணிகள் காயமின்றிதப்பினர்

(டில்லி)

இந்தியாவில் இந்திராகாந்தி விமான நிலையத்தில் வந்து இறங்கிய போயிங் 747 விமானம் தீப்பற்றி எரிந்தது.

ஆனாலும் அதில் பிரயாணம் செய்த 200 பயணிகளும் விமான பைலட்டும் மற்றும் ஊழியர்களும் உயிர் தப்பினர்.

இவ் விமானத்தின் இடதுபக்க என்ஜின் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. லண்டனில் இருந்து வந்த போயிங் 747 இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் இறங்கும் போதே இவ் விபத்து ஏற்பட்டது.

# கியூபாவை அமெரிக்கா தாக்கினால் வியட்நாமை விட மோசமாகும்

(ஹவானா)

''கியூபாவை அமெரிக்கா தாக்க முயன்றால் இன்னொரு வியட்நாமாக அல்லது அதைவிட மோசமானதாக கியூபா இருக்கும் என ஜனாதிபதி பிடல்காஸ்ரோ எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

அதேவேளை கியூபாவின் ஆயுதப்படைகள் நாடு முழுவதும் உசார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

கரிபியன் பிரதேசத்தில் அமெரிக்காவின் மூன்று பெரிய இராணுவ ஒத்திகளை ஒரே நேரத்தில் நடத்துகின்றமையால் ஏற்பட்டுள்ள நிலைமையை சமாளிக்கவே கடந்த புதன்கிழமை முதல் படைகளை உசார்படுத்தி வருவதாக கியூபா கூறியுள்ளது.

ஹவானாவில் உள்ள இராணுவ தளத்திற்கு சென்ற ஜனாதிபதி காஸ்ரோ ''அமெரிக்கர்கள் ஒத்திகைகளை மேற்கொள்கின்ற இச் சந்தர்ப்பமே நாமும் எமது சொந்த ஒத்திகைகளை செய்வதற்கான வாய்ப்பாகும்'' என்று கூறினார்.

அமெரிக்காவிற்கு வியட்னாமில் ஏற்பட்ட நிலையை விட அல்லது அதையும்விட மோசமானதாக இங்கே ஏற்படக் கூடியதாக எம்மை நாம் தயார் செய்ய வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கில் திருடர்களின் தொல்லை ஒரு வார காலமாக அதிகரித்துள்ளது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு இலந்தைக்குளம் வீதியில் இரு வீடுகளி ் திருடர்கள் கதவை தட்டி வீட்டு காரரை பயமுறுத்தினர் என்று அங்கு உள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (43)

## 4,000ரூபா நிவாரணம் பலருக்கு இன்னும் இல்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடை 4000 ரூபா பெரும்பாலானவர்களுக்கு இதுவரை வழங்கப்படாமையினால் பாதிக்கப்பட்ட இம் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

புனர்வாழ்வு அமைச்சு இவ் உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைக்கான நிதியை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்திருந்தும் பருத்தித்துறை இலங்கை வங்கிக்குப் பணம்

### ஸ்ரீவீரமாகாளிஅம்மன் பரிபாலனசபை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான பரி

### சீருடை வழங்கப்படவில்லை

வலி. தென் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை, மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய உப அலுவலகங்களில் கடமையாற்றும் மின்சாரப் பகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாகச் சீருடைகள் வழங்கப்படவில்லை.

விலைவாசிகள் உயர்வாக இருக்கும் இந்த நேரத்தில் தமது செலவில் சீருடைகளை பெற்றுக் கொள்ள முடியாது

# ஆஸ்ரலேசியாக் கிண்ணம் மீண்டும் பாகிஸ்தானுக்கு

முன்னோடி ஆட்டங்கள் முடிந்து அரை இறுதியாட்டங்களுக்கான அணிகள் தெரிவாகியபோது அவ்வாட்டங்களின் முடிவுகள் என்னவாக இருக்கும் என்பதில் பெருமள

117 ரண்கள் எடுத்து ஆட்டமிழக்காது நின்றார். இதன் பின் இலங்கையால் செய்யக் கூடியது எதுவுமே இருக்கவில்லை. எல்லோருமே சராசரியாக ஆடி 218 ஒட்டங்களுக்குச் சகல விக்கெட்டு

டிய வெற்றியை இல்லாமற் செய்தார். வாசிம் ஒரு தலைசிறந்த சகல துறை வல்லுனர் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். இறுதியாக 1990 இன் அஸ்ரலேசியாக் கிண்ணத்தை பாகிஸ்தான் மிகப் பெருமையுடன் மீண்டும் தக்க

எவ்வித பஞ்சமும் இல்லை. அக்ரம், வக்கார், ஆக்கிட் ஜவாட் என்று பட்டியல் நீண்டு செல்கிறது.

### ஒருநாள் சாதனைகளில் பாகிஸ்தான்

பாகிஸ்தான் 4 ஆவது முறையாக சார்ஜாவில் சம்பியனாக வந்துள்ளது. 1986இல் ஆஸ்ரலேசியாக் கிண்ணம், 1989 மார்ச்சில் சார்ஜாக் கிண்ணம்' மீண்டும் 1989 ஒக்டோபரில் மேற்கிந்திய அணியை வீழ்த்தி சம்பியன்ஸ் ட்ரொபி இன்று 90 இல் மீண்டும் ஆஸ்ரலேசியாக் கிண்ணம். இவற்றோடு

## பரிபாலனசபை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபைப் பொதுக் கூட்டமும்; புதிய பரிபாலனசபைத் தேர்வும் சென்ற ஞாயிறன்று மாலை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

சபைத்தலைவர், பொருளாளர், செயலாளர் உட்பட ஏனைய நிர்வாகக் குழு உறுப்பினர்களும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைக்கான நிதியை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்திருந்தும் பருத்தித்துறை இலங்கை வங்கிக்குப் பணம் வந்து சேர்வதில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல்களால் வங்கியில் பணப்பற்றாக்குறை நிலவுவதனாலேயே இந்நன்கொடைப் பணத்தை மக்களுக்கு வழங்குவதற்கு வங்கி இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (25)

வில்லை.

விலைவாசிகள் உயர்வாக இருக்கும் இந்த நேரத்தில் தமது செலவில் சீருடைகளை பெற்றுக் கொள்ள முடியாது என்றும், எனவே மேலதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து தமக்கு சீருடை வழங்கப்பட வேண்டும் என்றும் இந்த ஊழியர்கள் கேட்கிறார்கள். (19)

# வாகரைக்கு நிவாரணம் பெற 362 பேர் வரவில்லை!

(மட்டக்களப்பு)

வாகரை நடமாடும் செயலகத்தில் புனர்வாழ்வு நிவாரணம் ரூபா 4000 பெறுவதற்கு 362பேர் சமுகமளிக்கவில்லை.

1905 பேர் தெரிவு செய்யப்பட்டு நேரடியாக வழங்குவதற்காக ரூபா 70 லட்சத்து 80,000 கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் 1542 பேர் தான் சமுகமளித்து ரூபா61லட்சத்து 68,000 வழங்கப்பட்டது.

மிகுதி 362பேர் சமுகமளிக்க தவறியதன் பின்னணி என்ன என பலரும் கேட்கிறார்கள்.

அப்பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் தலைமறைவா? போலிப் பெயர்களா? அல்லது நிவாரணம் பெற விரும்பாதவர்களா? என கேள்விகள் எழுந்துள்ளது.

அதேநேரம் இந் நிவாரணம் பெற தெரிவானவர்கள் பட்டியல் பொதுமக்கள் ஆட்சேபனைகளுக்காகஒருவாரகாலம் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இப்பகுதியில் வைக்கப்படவில்லை என வாகரை வாசிகள் தெரிவித்தனர். (37)

## பொலிஸார் விபரங்கள்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விபரங்கள் பொலிஸ் மா அதிபரினால் கோரப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம், முஸ்லிம் என இன அடிப்படையில் இவ் விபரங்கள் கோரப்பட்டுள்ளது

பொலிஸாருக்கு புதிய இடமாற்றத் திட்டம் வகுப்பதற்காகவே இவ் விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (37)

# உ.அ. அதிபர் நிலையத்திற்கு தண்ணீர் பிரச்சினை

(யாழ்ப்பாணம்)

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகத்திற்கு தண்ணீர் வசதி அற்ற நிலை இருந்துவருகிறது.

இவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு நீர்வசதி ஏற்படுத்துவதற்கு 136000 ரூபா செலவிற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது இந்நிதியைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் தெரிவிக்கிறார். (லோ)

# நிவாரணம் வழங்க நெல்லியடி மக்கள் வங்கி மறுப்பு

(கரவெட்டி)

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழான 1000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்க நெல்லியடி மக்கள் வங்கி மறுத்து வருகின்றது.

தமக்கு போதிய பாதுகாப்பு வசதியின்மையாலேயே மேற்படி நிவாரணக் கொடுப்பை வழங்க முடியவில்லையென்றும்மேற்படி வங்கிஊழியர்கள் நிவாரணப் பணம் பெறச் சென்ற மக்களுக்கு கூறியுள்ளனர். இதனால் மேற்படி நிவாரணப் பணம் பெறும் மக்கள் தினமும் ஏமாற்றத்துடனே செல்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

இதேநேரம்உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நிவாரணப் பணத்தை இப்பகுதியிலுள்ள மக்கள் வங்கி வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (18)

# கனரக வாகனம் மிதிவெடியில் சிக்கியது!

(முள்ளியவளை)

முல்லைத்தீவு-நெடுங்கேணி வீதியில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த சமயம் கனரக வாகனம் மிதிவெடியில் அகப்பட்டு சேதமானது.

வீதிக்கு அருகில் முன்னர் இந்தமிதிவெடி புதைத்து வைக்கப்பட்டிருந்ததால் இச்சம்பவம் இடம்பெற்றது.

நெடுஞ்சாலைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான இந்த வாகனத்தின் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார்.

இச்சம்பவத்தையடுத்து திருத்த வேலைகளைச் செய்ய ஊழியர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (58)

முடிந்து அரை இறுதியாட்டங்களுக்கான அணிகள் தெரிவாகியபோது அவ்வாட்டங்களின் முடிவுகள் என்னவாக இருக்கும் என்பதில் பெருமளவில் ஊகங்களுக்கு இடமிருக்கவில்லை. இருப்பினும் பாகிஸ்தான் நியூசிலந்தையும், அவுஸ்திரேலியா இலங்கையையும் இவ்வளவு மோசமாகத் தோற்கடிப்பர் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. பாகிஸ்தானும், அவுஸ்திரேலியாவும் எந்தளவு வீச்சுக்கொண்ட அணிகள் என்பதற்கு இவ் இரண்டு ஆட்டங்களும் நல்ல உதாரணங்களாகும்.

முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் நியூசிலந்து வெறும் 74 ரண்களுக்கு தன் முழுவிக்கெட்டுகளையும் இழந்தது. இந்த ஆட்டத் தொடரில் இரண்டாவது முறையாக வக்கார் யூனுஸ் துடுப்பாட்டக்காரரைத் திகைக்க வைத்தார். முன்னதாக இலங்கையுடனான ஆட்டத்தில் 26ரண்களுக்கு 6 விக்கெட்டுகளைச் சரித்த இவர் இந்த முக்கிய ஆட்டத்தில் 20 ரண்களைக் கொடுத்து 5விக்கெட்டுகளைச் சரித்தார். இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கு வெற்றிக்கான இலக்கை எட்ட 15ஓவர்கள் மட்டும் போதுமானதாக இருந்தது.இவ்வாட்டம் பாகிஸ்தான் மிகப்பலமானதான ஒரு நிலையில் இறுதி ஆட்டத்துக்குச் செல்வதைக் காட்டியது.

### இலங்கை- அவுஸ்திரேலியா

இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் இலங்கை அவுஸ்திரேலியாவோடு சிறந்ததொரு எதிர்ப்பைக் காட்டியே பணியும் என்று எதிர்பார்க்கப்பட்டது ஆனாலும் அங்கு நியூசிலந்து இங்கு நாங்கள் என்பதுபோல் படுதோல்வியைத் தழுவிக்கொண்டது. அவுஸ்திரேலியா தம் அதிஉயர் ஒருநாள் ஆட்ட எண்ணிக்கையான 332ஐ அடைய இலங்கைப் பந்துவீச்சாளரும், பீல்டர்களும் பெரிதும் உதவி செய்தனர். அதோடு சைமன் ஒடொனல் ஒருநாள் ஆட்டத்தின் மிக வேகமான 50 ஓட்டங்களைப் 16 பந்துகளில் எடுத்துச் சாதனை புரிந்தார். இவரது அரைச்சதத்தில் 6 சிக்சர்களும் 4 பவுண்டரிசளும் அடங்கும். இவர் மொத்தம் 74 ஓட்டங்களைப் பெற, டீன் ஜோன்ஸ்

மிழக்காது நின்றார். இதன் பின் இலங்கையால் செய்யக் கூடியது எதுவுமே இருக்கவில்லை. எல்லோருமே சராசரியாக ஆடி 218 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். ஹசான் திலகரட்ண மட்டும் பெறுமதிமிக்க 76 ஓட்டங்களைச் சேகரித்தார். இவ்வாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலியாவும் மிகப்பலமான அணியாக இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

### ஆஸ்ரலேசியாக் கிண்ணம்

இறுதியாட்டம் மிகப் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்டது. முதலில் துடிப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஒருநாள் ஆட்டத்துக்கு உகந்த முறையில் ஓவருக்கு 5 ரண்களுக்கு மேல் என்ற சாதகமான நிலையில் எண்ணிக்கை பெற்று மொத்தம் 266 ரண்களைப் பெற்றுக் கொண்டது. இதில் குறிப்பிடத்தக்கது சாஹிட் அன்வரின் 40 ரண்கள், சலீம் மாலிக் திரட்டிய 87 ரண்கள். ஆனால் ஆட்டத்தின் போக்கை மாற்ற உதவியது

- நிர்மலன்

வாசிம் அக்ரம் அடித்த ஆட்டமிழக்காத 49 ஓட்டங்களாகும். ஆட்டத்தின் இறுதி ஓவர்களில் வேகமாக ரண்களை அதிகரித்த வாசிம் அக்ரம் அணியின் சராசரிஎண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாக இருந்தார்.

### மீண்டும் வாசிம் அக்ரம்

வெற்றிபெற 267ஓட்டங்கள் பெறவேண்டிய அவுஸ்திரேலிய அணியினர் நன்றாகவே ஆட்டத்தைத் தொடங்கினர்.முன் வரிசை ஆட்டக்காரர்களான பூன், டெயிலர், வோ தொடர்ந்து சைமன் ஒடொனல் போன்றோர் நன்றாகவே ஓட்டங்களைச் சேகரித்தனர். ஏறத்தாள 4 ஓவர்கள் மீதமிருக்கையில் வெற்றிக்கு 37 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அவுஸ்திரேலியா அதனைச் சேகரிக்க முடியாத அணியல்ல. ஆனால் மீண்டும் வாசிம் அக்ரம் ஆட்டத்தின் போக்கையே மாற்றி வெற்றியையும் பாகிஸ்தானுக்காக்கினார். எஞ்சியிருந்த மூன்று விக்கெட்டுக்களை தொடர்ச்சியான 3 பந்துகளில் சரித்து, அவுஸ்திரேலியா பெறவேண்

...ஒரு தலைசிறந்த சகல துறை வல்லுனர் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். இறுதியாக 1990 இன் அஸ்ரலேசியாக் கிண்ணத்தை பாகிஸ்தான் மிகப் பெருமையுடன் மீண்டும் தக்க வைத்துக் கொண்டார்கள்.

இவ் வாட்டத் தொடரில் மிகச் சிறப்பாக பாகிஸ்தானுக்காக ஆடியவர்களில் குறிப்பாகக் கூறக் கூடியவர்கள் வக்கார் யூனுசும், வாசிம் அக்ரமும். வக்கார் யூனுஸ் மொத்தம் 17 விக்கெட்டுகளை இத் தொடரில் வீழ்த்தியுள்ளார். பாகிஸ்தான் வேகப்பந்து அணியில் முதன்மையும், இத்தொடரின் வேகமான பந்து வீச்சாளர் என்ற பெருமையும், தொடரின் சிறப்பாட்டக்காரர் என்ற விருதும் இவருக்குரியது. இம்ரான் ஓய்வு பெற்ற பின் வேகப் பந்து வீச்சாளருக்கு பாகிஸ்தானில்

மார்ச்சில் சார்ஜாக் கிண்ணம் மீண்டும் 1989 ஒக்டோபரில் மேற்கிந்திய அணியை வீழ்த்தி சம்பியன்ஸ் ட்ரொபி இன்று 90 இல் மீண்டும் ஆஸ்ரலேசியாக் கிண்ணம். இவற்றோடு இலங்கையில் 86 இல் நடைபெற்ற முத்தரப்பு சுற்றுப் போட்டிக் கிண்ணம் 89 இல் கௌரவமிக்க ஜவஹர்லால் நேரு கிண்ணம்... இப் படியாக பாகிஸ்தானின் ஒரு நாள் சாதனைகள் தொடர்ந்து கொண்டே போகின்றன. இடையிடையே தோல்விகளை சந்தித்தாலும் மொத்தத்தில் கூடுதலாக வெற்றிகளையே பாகிஸ்தான் அணியினர் பதித்துள்ளனர். இவர்களே இன்றைய உலக ஒரு நாள் ஆட்ட ஜாம்பவான்கள் என்று கூறுவது ஓரளவு பொருத்தமானதாகவே தெரிகிறது.

# வட துருவத்தை நடந்தடைந்த இரு நோர்வேயினர்

(ஒஸ்லோ)

பனி படர்ந்த ஆர்ட்டிக் பிரதேசத்தைக் கடந்து நோர்வே நாட்டைச் சேர்ந்த இருவர் வடதுருவத்தை அடைந்துள்ளார்கள். கால் நடையாக கனடாவிலிருந்து 500 மைல்கள் பனிப் படலங்கள் மீது நடந்து வட துருவத்தை அடைந்த முதல் மனிதர்கள் இவர்கள் என்று இக் குழுவைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் ஞாயிறன்று தெரிவித்தார்.

நாய்கள், குதிரைகள், பனியில் ஓடும் ஸ்கூட்டர்கள், இயந்திரப் படகுகள், விமானங்கள் மூலம் வட துருவத்தை அடைய வேறு பல குழுக்கள் 13 முறைகள் முயற்சித்தும் வடதுருவத்தை அடைய முடியவில்லையாம். இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆங்கில நாட்டைச் சேர்ந்த குழு ஒன்று வடதுருவத்தைச் சென்றடைய மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தது,

27 வயதினர்களான ஏர்லிங் ககுவும், போர்ஜ் ஒஸ்லாண்டும் தாம் சனியன்று வடதுருவத்தை வந்தடைந்து விட்டதாக வானொலித் தொடர்புக் கருவி மூலம் தெரிவித்தனர், கனடா விமானம் இவர்களை வடதுருவத்திலிருந்து ஏற்றிவரவுள்ளது.

உறைபனி மூடிய தரை பாதுகாப்பு இல்லாததாக இருந்ததால் இவர்கள் ஞாயிறன்று சறுக்கு வண்டிகளில் (ஸ்கீ) துருவத்தை விட்டு விலகிச் செல்லவேண்டி ஏற்பட்டது.

மார்ச் 8ஆம் திகதி வட கனடாவிலிருந்து ஆரம்பமான இத் துணிகரமான பயணத்தின் 10-வது நாள் 3 பேரைச் சேர்ந்த குழுவில் ஒருவர் காயமுற்று பிரயாணத்தைக் கைவிட்டார்.

## அன்பளிப்பு

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கு 5000/- ரூபா பெறுமதி வாய்ந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை கொக்குவில் சபாபதி வீதியைச் சேர்ந்த எஸ். சிறிகாந்தராசா அன்பளிப்புச் செய்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சபையால் நிறுவப்பட்ட தண்ணீர் தாங்கியின் இயந்திரம் கடந்த ஆண்டு விடுமுறையின் போது திருட்டுப் போனதால் ஒரு தவணை காலமாக மாணவர்கள் தாகசாந்தி செய்வதற்கு அயல் வீடுகளையே நாடவேண்டி இருந்து வந்தது.

தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை அன்பளிப்புச் செய்தவர் மேற்படி மகா வித்தியாலய பழைய மாணவராவார். (21)

# யாழ். மாவட்டப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் மே 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்குரிய இலக்கங்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை ஒன்பதரை மணிக்கு அவரவர் பாடசாலை கோட்ட அலுவலகங்களில் கொடுக்கப்படும்.

இவ்விலக்கங்களைப் பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், அறிமுக அட்டையைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என உடற்கல்விப் பிரிவு கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு, இப்போட்டி நடைபெறும் என்றும், இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு, யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ.சுந்தரலிங்கமும் பாரியாரும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவித்தார். (லோ)

## தெய்வீக சுகமளிக்கும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெய்வீக சுகமளிக்கும் சுவிசேஷ கூட்டம் நேற்று முதல் மே 10 ந் திகதிவரை தினமும் மாலை 3 மணிக்கு சுண்டுக்குளிமகளிர் கல்லூரிக்குஎதிரில் நடைபெறும்.

வண. ஜி.ராஜமணி, கெத்செமன சுவிசேஷ சபைப் போதகர் சுவிசேஷ செய்தியைப் பகிர்ந்தளிப்பார்.

# மந்திகை மருந்துக் கடையில் கொள்ளை!

(பருத்தித்துறை)

புலோலி மந்திகையிலுள்ள மருந்து விற்பனை நிலையமொன்று இரவு வேளையில் உடைக்கப்பட்டு பல ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியான மருந்துவகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மந்திகை அரசினர் வைத்தியசாலை பஸ்தரிப்பு நிலைய அருகாமையில் உள்ள மருந்து விற்பனை நிலையத்திலேயே இக் கொள்ளை இடம் பெற்றுள்ளது. இம் மருந்து விற்பனை நிலையத்தில் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரும் மருந்துகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

புலோலிப் பகுதியில் தொடர்ந்து வரும் கொள்ளைகளினால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியும் அச்சமும் கொண்டுள்ளனர் இப்பகுதியில் அடிக்கடி கொள்ளைகளில் ஈடுபடும் கொள்ளையர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படவேண்டும் என்று இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலோலிப்பகுதியில் மிகக் குறுகிய காலத்தில் புலோலி ப. நோ. கூ. சங்கமக்கள் கடைகொள்ளை மந்திகை கண்ணகை அம்பாள் ஆலய கொள்ளை கால்நடை வைத்திய அதிகாரியின் தங்கச்சங்கிலி அறுப்பு போன்ற கொள்ளைகள் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

# பாலம் திருத்தப்படாமல் பஸ்சேவை நடைபெறுமா?

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கு பஸ் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், பருத்தித்துறை சாவகச்சேரி பிரதான வீதியில் உள்ள பாலம் சேதமடைந்திருப்பதால் இவ் வழியூடாக இச்சேவையை நடாத்த முடியாதிருப்பதாக இ.போ.ச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலம் 1987 இல் லிபரேஷன் ஒப்பரேஷன் நடவடிக்கைகளின் போது சேதமாக்கப்பட்டது

சாவகச்சேரி .பருத்தித்துறை பஸ் சேவையின்றி சாவகச்சேரி பகுதிக்கு செல்லும் வடமராட்சி மக்கள் கொடிகாமம் சென்றே போக வேண்டியுள்ளது. இதனால் நேரமும் தூரமும் அதிகமாகிறது.

மன்னார் பகுதியிலிருந்து கேரதீவு ஊடாக வரும் வடமராட்சி மக்களும் சாவகச்சேரி வரைவந்து பின்னர் கொடிகாமம் வந்தே பருத்தித்துறைக்கு வர வேண்டியுள்ளது

எனவே இந்தப் பாலத்தையும் வீதியையும் திருத்தி சாவகச்சேரி பஸ் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (25)

காரைநகர்

## மருதடி விநாயகர் மகோற்சவம்

(காரைநகர்)

காரைநகர் மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்

சித்திரத்தேர் வெள்ளோட்டம் மே 16ஆம் திகதிபுதன்கிழமை இடம் பெறவுள்ளது.


புதிய பழைய தமிழ், ஆங்கில ஹிந்திப் படங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ள

புதிய பழைய தமிழ், சிங்களப் பாடல்களை சிறந்த STEREO முறையில் நவீன கருவிகள் மூலம் பதிவு செய்து கொள்ள உங்கள் வீடுகளில் நடைபெறும் சகலவிதமான விழாக்களையும் சிறந்த முறையில் வீடியோவில் பதிவு செய்திட நாட வேண்டிய இடம்;

**சேனா சன்ஸ்**

**ஓடியோ வீடியோ சென்ரர்**

இல 10, செட்டித் தெரு,
நல்லூர் - யாழ்ப்பாணம்.

(B/ 649)


## நகரசபை, வவுனியா

# கேள்வி விளம்பரம்

கீழ்க் காணப்படும் அட்டவணையில் உள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இணைப் பிரதிகளில் 24. 5. 1990ஆம் திகதி பிற்பகல் 2. 00 மணி வரை அரசாங்கத்தால் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் ரூபா 3600000/-க்கு (முப்பத்தாறு இலட்சம்) அல்லது அதற்குமேல் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமும் செலுத்தப்படுவதன் பேரில் 23. 5. 90 திகதி நண்பகல் 12. 00 மணிவரை கேள்விப் பத்திரங்கள், கேள்வி நிபந்தனைகள், வரைபடப் பிரதிகள் ஆகியவை நேரடியாக விநியோகிக்கப் படும். சித்திபெற்ற ஒப்பந்தகாரர் ஒப்பந்தப் பத்திரத்தில் கைச்சாத்திட்ட பின்னரும் எம்மால் வழங்கப்பட்ட வரைபடப் பிரதிகள் ஆகியன திரும்பக் கையளிக்கப்பட்ட பின்னரே கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப்படும்.

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு, 'செயலாளர், நகரசபை, வவுனியா' என விலாசமிடப்பட்டு 24. 5. 90 ஆம் திகதி பிற்பகல் 2. 00 மணிக்குமுன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது வவுனியா நகரசபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல்மூலையில், 'நவீன சந்தைக் கட்டிட மீளமைப்புக்கான கேள்வி' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள், 24. 5. 90 ஆம் திகதி பிற்பகல் 2. 15 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட முகவர் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவர்.

கேள்விக்காரர் கேள்வி விளம்பரம் மற்றும் கேள்விக் கட்டுப்பாடுகளுக்கமைய ஒழுக வேண்டும். கேள்விகளை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ நகரசபைச் செயலாளருக்கு உரித்துண்டு.

கேள்விக்காரர் தனியார் சம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளர்களினதும் பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|
| நவீன சந்தைக் கட்டிட மீளமைப்புக்கான வேலை - கட்டடம் 1. 11 | ரூ. 750/- | ரூ. 10,000/- |

(ஒப்பம்) இராஜா தணிகாசலம்
செயலாளர், நகரசபை வவுனியா.

B.650


சகல விதமான மர அரிவு வேலைகளுக்கும்


## மீன் விலை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

சூறாவளிக்காற்று அடிக்கும் என்ற அச்சத்தினால் வட பகுதி மீனவர்கள் தூர இடங்

சகல விதமான மர அரிவு வேலைகளுக்கும்

மரங்கள் வாங்கவும் விற்கவும்.....

பலகைகள், தீராந்திகள், றீப்பைகள்

ஓடருக்கு அரிந்து பெற்றுக்கொள்ளவும்

மேசை, கதிரை, கட்டில்
மற்றும்
நாகரிக தளபாடங்கள் அனைத்தையும்

நிதான விலையில் செய்து பெற்றுக்கொள்ளவும்...

யாழ்நகரில் நம்பகமான ஒரே ஸ்தாபனம்

# சி. தருமராசா மரக்காலை

279, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(B.637)


## அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

சூறாவளிக்காற்று அடிக்கும் என்ற அச்சத்தினால் வட பகுதி மீனவர்கள் தூர இடங்களுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால் மீனின் விலை அதிகரித்துள்ளது. (43)

## நிந்தவூரில் அங்குரார்ப்பணம்

(நிந்தவூர்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நிந்தவூர்க்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஜனாப் எஸ். எச். அகமட் கிளையின் தலைவராகவும், டாக்டர் திரு. வீ. தவயோகநாதன் உப தலைவராகவும், ஜனாப்கள் ஏ. எம். அமீன், ஏ. எல். ஏ. றகீம் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், ஜனாப் வை, எல். ஏ. அஸீஸ் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு, கஸ்ரோ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அதிதியாகக் கலந்து கொண்டதுடன், நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்ரமும் கலந்து கொண்டார். (53)

## வீதியில்வெளிச்சம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஆலடிச் சந்தியிலிருந்து கண்ணகை அம்மன் கோவிலுக்குச் செல்லும் சுமார் முக்கால் மைல் நீளமான வீதி தற்போது ஒளிமயமாக காட்சியளிக்கின்றது.

கண்ணகை புரம் சைவ இளைஞர் சங்க இளைஞர்களின் முயற்சியால் இவ்வீதியில் உள்ள பெரும்பாலான மின் கம்பிகளில் பெறுமதி வாய்ந்த ரியூப்லைட்டுகள் பொருத்தப்பட்டு இவ்வீதியெங்கும் ஒளிமயமாகக் காட்சியளிக்கின்றது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கண்ணகை அம்மன் ஆலய திருவிழாவுக்கு பக்தர்கள் எதுவித பயமுமின்றி இவ்வீதியால் செல்ல முடிகிறது. (22)

### சிந்தனைக்கு

மானுட ஜென்மம் பெறுவதற்கரிதெனும்
வாய்மையையுணர்ந்தாரேல் - அவர்
ஊனுடல் தீயினுமுண்மை நிலைதவற
உடன்படுமாறுவதே ?

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 09 - 05 - 90

தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

## தமிழ் நாடு விழித்திருக்கிறது

"அண்மையில் கப்பலில் வந்த போராளிகளுக்குத் தமிழ் நாட்டில் அனுமதி மறுக்கப்பட்டதன் காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அவர்கள் இங்கு வந்திருந்தால் மோதல்கள் ஏற்படலாம். தமிழ்நாட்டை மற்றொரு பஞ்சாப் ஆகவோ காஷ்மீர் ஆகவோ மாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை"

"இந்தியாருடே" சஞ்சிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அகதிகள் என்ற பெயரில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதாகத் தெரிவித்து அங்கு தஞ்சம் புகுந்திருந்த சில குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது முதல்வர் கலைஞருக்குத் தெரியாத விஷயமல்ல.

இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் இராணுவ முகாம்களுக்கு உள்ளும் அருகேயும் தங்கள் முகாம்களை அமைத்துக் கொண்டு அடாவடித்தனங்களில் ஈடுபட்டதும் கலைஞர் கருணாநிதி அறியாததல்ல.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு எப்படியோ நடந்த தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ போன்ற குழுக்களைச் சேர்த்து வரதராஜப் பெருமாள் தலைமையில் ஒரு பொம்மை ஆட்சியை மாகாணசபையில் றோ என்ற இந்திய உளவுப் பிரிவும் ராஜீவின் வெளிவிவகார அமைச்சும் இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் அமர்த்தியதும் அந்த ஆட்சியின் அலங்கோலங்களும் முதல்வர் கலைஞர் தெரிந்து கொள்ளாத விஷயமல்ல.

இந்தியப்படை இங்கிருந்து விலகத் தொடங்கியதும் இந்தக் குழுக்கள் பொதுமக்களைத் துன்புறுத்தியும்

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் - 3

## சில கருத்துக்கள்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
தலைவர், வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்.

நேற்றைய தொடர்ச்சி...

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பற்றிய ஆங்கிலக் குறிப்புக்களும் குடிசன அறிக்கைகளும் மட்டும் இவ்விதம் தமிழரின் பாரம் பரியத்தினை காட்டவில்லை. ஆங்கிலேயருக்கு முன்னர் இந்நாட்டை ஆண்ட டச்சுக்காரர் (1658–1796)இப்பிரதேசம் தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்பதனை உணர்த்தி உள்ளது. இலங்கையின் கரையோரப்பகுதிகளை நிர்வாக வசதிக்காக 6 மாவட்டங்களாக இவர்கள் பிரித்தனர். இவற்றில் மூன்று தமிழ் மாவட்டங்களாகும்.

1. மோதரகம் ஆறு-யாழ்ப்பாணம் வரை யாழ்ப்பாண மாவட்டம்.
2. கொக்குளாய் - வெருகல் ஆறுவரை திருகோணமலை மாவட்டம்
3. வெருகல் ஆறு - குப்புக்கன் ஆறு வரை - மட்டக்களப்பு மாவட்டம்

இம் மூன்று மாவட்டங்களும் ஒரே நீதி- நிருவாகப் பிரிவில் இயங்கிய ஒன்றே வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே பிரதேசம் என இவர்கள் எண்ணியதை எடுத்துக் காட்டுகின்றது. இக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் உள்ள வன்னிச்சிற்றரசுகள் பெயரளவில் கண்டிச் சிங்கள மன்னர் ஆணையை ஏற்றாலும் நிருவாகம் தமிழில் நடைபெற்றதென்றே தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களே இவை என்பதனை உணர்த்துகின்றன. இப்பகுதிகளில் தமிழ் வழக்கிலிருந்ததைப் போர்த்துக்கேயர் ஆட்சிக்குரிய (1505-1658) ஆவணங்களும் எடுத்தியம்புகின்றனஎனலாம்.

ஐரோப்பியர் வருமுன் உள்ள வரலாற்றை நோக்கும் போது இலங்கையின் நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பற்றிய கேள்வி எழுகிறது. தொல்லியல் ஆய்வுகள் வளர்ச்சி பெறாத காலகட்டத்தில் இந்நாட்டின் முதற் குடிகள் வடஇந்தியாவிலிருந்து வந்து குடியேறிய சிங்கள மக்களின் மூதாதையினராகிய விஜயனும் அவனது கூட்டத்தினரும் என நம்பப்பட்டது. ஆனால் கடந்த இரு சகாப்தங்களாக மேற்கோள்ளப்பட்ட அகழ்வு ஆய்வுகள் இந்நாட்டிற்கு நாகரிகத்தினைக் கொண்டு வந்தவர்கள் வடநாட்டவரல்லர் என்பதை எடுத்துக்காட்டும் அதே நேரத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்தோரே என்பதனையும் நிரூபித்துள்ளன. தமிழ்மக்களும் சிங்கள மக்களும் இவர்களின் வழி வந்தவர்களே என்பதும் இதன் முடிபாகும். பௌத்தத்தின் வருகையே தமிழ்ச்சிங்கள கலாசாரங்களைத் தனித்தனி வழி செல்லவைத்தது. இவர்கள் விட்டுச் சென்ற அழிபாடுகள் கத்தரோடை, மன்னார், அநுராதபுர மாவட்டம் தென்கிழக்கே ரோகனப்பிராந்தியம் கிழக்கே மட்டக்களப்பு ஆகிய இடங்களிற் காணப்படுவதால் சிங்கள மக்களைப்போல் தமிழ் மக்களும் ஆதிக்குடிகள் என்பதும் பெறப்படுவதால் இது சிங்கள மக்களுக்கு மட்டுமே உரிய நாடு என்பது விதண்டாவாதமாகும். கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த முஸ்லிம்கள் மேற்கிலங்கையில் தான் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதால் கிழக்கிலங்கையில் இவர்களின் செறிவான படர்ச்சி ஐரோப்பியர் வருகையோடுதான் ஏற்பட்டது. இந்தியத் தமிழரும் கடந்த நூற்றாண்டில் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையின் பொருட்டு இங்கு வரவழைக்கப்பட்டனர். அவர்களே இலங்கையின் மத்திய பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இதனால் வரலாற்று ரீதியாக நோக்கும்போது இந்நாட்டில் சிங்கள மக்களைப் போலத்தமிழ் மக்களும் ஆதிக்குடிகளாக விளங்கியது மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளிலும் வியாபித்திருந்ததும் புலனாகின்றது.

ஈழத்தின் வரலாற்றுக் காலம் கி. மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது. இக்காலத்திற்கும் கிறிஸ்தாப்தத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் 250 ஆண்டுகளில் 1/3 காலப் பகுதியில் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழராட்சி இலங்கை முழுவதிலும் காணப்பட்டதை பாளி நூல்களே எடுத்துக் காட்டுகின்றன. இதே காலத்தில் தமிழரைக் குறிக்கும் 'தமிழ' என்ற இனக்குழுப்பெயர் கூட இலங்கையின் மிகப்பழைய வடிவமாகிய பிராமி வரிவடிவத்தில் அநுராதபுரத்திலும் வவுனியா, கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள குடுவில் என்ற இடத்திலும் காணப்படுவதும் தமிழர் வடக்கு கிழக்குப் பகுதியின் ஆதிக்குடிகள் என்பதும் வெளிப்படை வடக்குக் கிழக்குக் கரையோரப்பட்டினங்களிலும் சிறப்பாக இவர்கள் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. அநுராதபுர அரசின் வீழ்ச்சியின் பின்னர் கி. பி. 1000-1250 வரை நிலவிய பொலநறுவை அரசு காலத்திலும் முதல் எழுபது ஆண்டுகள் வடக்கு கிழக்குப் பகுதிகள் உட்பட சோழராகிய தமிழர் கையிலே தான் இலங்கை முழுவதும் காணப்பட்டன. முக்கியமாகக் கிழக்குப் பிராந்தியத்திலே சோழர் செல்வாக்கும் தமிழரின் ஆதிக்கமும் மேலோங்கி இருந்தது. இதன்பின்னர் தோன்றிய தமிழரசாகிய யாழ்ப்பாண அரசு காலத்தில் (கி. பி. 1250—1619) தற்கால வடபகுதி மட்டுமன்றி கிழக்கே திருகோணமலை வரை இதன் எல்லை சென்றிருந்தது. திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் தமிழ் வன்னியர் ஆட்சி நீடித்தது. இவர்கள் பெருமளவு சுதந்திரமாக விளங்கினர், பின்னர் இவர்கள் கண்டி இராச்சியத்தின் மேலாணையை ஏற்றாலும் இப்பகுதி தமிழ்பகுதியாகவே விளங்கியது. இதனால் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் கால் வைத்தபோது மூன்று சுதந்திர இராச்சியங்கள் இருந்தன. அவையாவன யாழ்ப்பாணம், கோட்டை, கண்டி என்பனவாகும். தமிழ்ப் பகுதியில் யாழ்ப்பாணத் தமிழரசும் தமிழ் வன்னி அரசுகளும் இருந்தன.

இவ்வாறு வரலாற்று ரீதியாகநோக்கும்போதும் தமிழ் மக்களும் இந்நாட்டின் ஆதிக்குடிகள் மட்டுமன்றி கிறிஸ்தாப்தத்திற்கு முன்னரும் பின்னரும் சிற்சில காலப்பகுதிகளில் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்ததும், நாட்டின பல பகுதிகளிலும் பரந்திருந்ததும், அநுராதபுர அரசின் வீழ்ச்சிக்குப் பின்னரே வடக்கு கிழக்கு மாகாணங்களில் செறிந்திருந்ததும் தெரிகிறது. காலகதியில் இவை இவர்களின் பாரம்பரிய பிரதேசமாயின. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இக்கோட்பாடு வைக்கப்பட்டாலும்கூட இது நியாயமான கோட்பாடு என்பதனை இலங்கையின் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது எனலாம். துரதிஷ்டவசமாகச் சிங்கள மக்களிடையே வேரூன்றி இருந்த வரலாற்றுச் சம்பவங்களைக் கோவைப்படுத்தும் மரபு தமிழ் மக்களிடையே பண்டுதொட்டுக் காணப்படாததால் தமிழ் மக்கள் பற்றிய தொடர்ச்சியான வரலாற்றைத் தமிழ் நூல்கள் குறிக்கவில்லை எனலாம். எழுதப்பட்ட தமிழ் நூல்களும் காலத்தால் யாழ்ப்பாண அரசுக்குப் பிந்தியவையே. பாளி, சிங்கள நூல்களைப் பொறுத்தமட்டில் முழு இலங்கை சிங்களவருக்கு உரியதே என்ற கோட்பாட்டில் எழுதப்பட்டதால் இலங்கைத் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தின் வரலாறு பற்றிய பல முக்கியமான தகவல்களை இவைகள் தட்டிக் கழித்து விடுவதற்கான வாய்ப்பும் நிச்சயம் இருந்தது எனலாம்.

வடகிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள இஸ்லாமியச் சகோதரர்களும் தமிழ் மக்களோடு ஒருங்கிணைந்து வாழ்ந்து வந்ததை வரலாற்றுச் சான்றுகளும் குடிசன மதிப்பீடுகளும் எடுத்துக் காட்டுவதால் தமிழ் மக்கள் போன்று இஸ்லாமியரதும் பாரம்பரியப் பிரதேசமாகவும் இவை விளங்குகின்றன எனலாம். இதனால் இவ்விரு மாகாணங்களையும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என அழைப்பதும் பொருத்தமானதே.

நன்றி ஜீவசக்தி

## வயர்கள் தட்டுப்பாட்டால் இணைப்பு வேலைகள் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொலைத் தொடர்புகள் திணைக்களத்தில் தொலைபேசிவயர்களுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக புதிய இணைப்புக்கள், துண்டிக்கப்பட்ட இணைப்புக்கள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது

13,000 வயர்கள் உடனடியாக தேவை ஆனால் வயர்க்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் தான் வயர் பெற

## நாகபூஷணி ஆலய உற்சவம்

## யாழ். செயலகத்தில் மாநாடு

ஆட்சியின் அலங்கோலங்களும் முதல்வர் கலைஞர் தெரிந்து கொள்ளாத விஷயமல்ல.

இந்தியப்படை இங்கிருந்து விலகத் தொடங்கியதும் இந்தக் குழுக்கள் பொதுமக்களைத் துன்புறுத்தியும் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டதும் பொதுமக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டதும் கலைஞர் நன்கறிந்த சங்கதிகள்.

இந்தக் குழுக்களில் சிலர் படகுகளில் தமிழ் நாட்டுக்குத் தப்பி ஓடிச்சென்றுகொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டில் மாண்ட செய்தியும் பின்னர் இந்தக் குழுவினர் கப்பலில் ஏற்றித் தமிழ் நாட்டை நோக்கி அனுப்பப்பட்டபோதுதான் கலைஞர் கண்ணைத் திறந்தார். வாயையும் திறந்தார்.

தமிழ் நாட்டுக்கு இந்தக் கும்பல் வந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை இப்போது விளக்கமாக இந்தியாருடே சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சூளை மேட்டில் நடந்த சம்பவமும் அதுபோன்ற பிற சம்பவங்களையும் கலைஞர் கருணாநிதி மறந்திருக்க முடியாது.

இந்தியப்படை இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறி டில்லி செல்லும் வழியில் சென்னையில் போய் இறங்கியபோது அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலைஞர் கலந்து கொள்ளவில்லை.

தமிழ்நாடு காங்கிரஸார் இதை ஒரு ''தேசத் துரோக''க் குற்றமாகச் சுமத்த எத்தனித்தபோது, ''இலங்கையில் தமிழ்ச் சகோதரர்களைக் கொன்று குவித்துவிட்டு வந்த இராணுவத்தை நான் எப்படி வரவேற்க முடியும். எனது மனச்சாட்சி அதற்கு இடந்தரவில்லை'' என்று கலைஞர் கருணாநிதி துணிந்து சொன்னபோதுதான் ஒரு மறத்தமிழன்தான் என்பதை உலகுக்கு உணர்த்தி தமிழ் நெஞ்சங்களில் உயர்ந்து நின்றார்.

கடந்த சில வாரங்களாக தமிழ்நாடு சட்டசபையில் தமிழ்நாடு காங்கிரஸார் விடுதலைப் புலிகள் பற்றி அவதூறு கற்பிக்க எத்தனித்த போதெல்லாம் ''தமிழ் நாட்டில் கைதாகும் போராளிகள் விடுதலைப் புலிகள் அல்லர்; அவர்கள் தமிழ் நாட்டில் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழீழம் இப்போது புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது'' என்று ஆதாரத்துடன் பதிலடி கொடுத்து தமிழ்நாடு காங்கிரஸாரின் வாயை அடக்கி வைத்த திறமை கலைஞருக்கே உரிய பெருமை.

என்னதான் தேசிய ஒருமைப்பாடு, தேசபக்தி என்று இந்திய வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் நாளும் பொழுதும் பிரசாரம் செய்து வந்தாலும் இலங்கையில் அமைதிகாக்க வந்த இந்திய இராணுவம் செய்த அட்டூழியங்களை தமிழ்நாடு காங்கிரஸார் ''தேசபக்தி'' என்ற போர்வையில் மறைத்தாலும் தமிழ் நாட்டு மக்கள் மறைக்கவோ, மறுக்கவோ தயாராக இல்லை!

இப்போது கலைஞர் கருணாநிதி இலங்கையில் நிலவும் உண்மை நிலையைத் துணிச்சலுடன் உரத்துச் சொல்வதுபோல் கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பே சொல்லி வந்திருந்தால் தமிழ் நாட்டில் காங்கிரஸோ அண்ணா தி. மு. க. வோ பெரும் வெற்றியீட்டியிருக்க முடியாது.

# நாகபூஷணி ஆலய உற்சவம் யாழ். செயலகத்தில் மாநாடு

(நயினாதீவு)

நயினாதீவு அருள்மிகு நாகபூஷணி அம்பாள் வருடாந்த மகோற்சவம் சம்பந்தமாக அண்மையில் யாழ். செயலகத்தில்அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பின்வரும் விடயங்கள்பற்றி ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கோயிலின் அயலில் ஐம்பது தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்படும். இவற்றில் பத்து மலசல கூடங்கள் நயினாதீவு பிரதேசசபையினரால் அமைப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

இதற்கான உபகரணப் பொருட்கள் சுகாதாரப் பகுதியினருக்கு விழாக்காலத்தில் உபயோகிப்பதற்காக அரசாங்க அதிபரினால் வழங்கப்படும்.

இம்முறை கோயில் நிர்வாகத்தினால் நிரந்தரமாக கட்டப்பட்ட கட்டிடங்களில் விழாக்கால அரச அலுவலகங்கள் அமையும்.

அனுமதி பெற்ற சிற்றுண்டிச் சாலைகள் மாத்திரம் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.

சுகாதாரமுறைப்படி நடாத்தப்படாத சிற்றுண்டிச்சாலைகளின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும்.

வழமைபோல் இம் முறையும் தற்காலிக வைத்திய நிலையம் இயங்கும். சென்ற வருடங்களிலும் பார்க்க இவ் வருடம் யாத்திரிகர்கள் அதிகமாக வருவார்கள் என்ற கணிப்பினால் விழாக்காலம் முழுவதும் வைத்திய நிலையம் இயங்க வேண்டும்.

அத்துடன் கடைசி ஐந்து நாட்களிலும் மேலதிக பதில் வைத்திய அதிகாரிகளையும் தேவையான மருந்து வகைகளையும் வழங்கும்படி சுகாதார சேவைப் பணிப்பாளரை கோருவது.

ஆலய மகோற்சவ காலம் முழுவதிலும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என இலங்கை மின்சார சபையினரிடம் கோருவது.

வழமைபோல் சேவையாற்றும் தொண்டர் அமைப்புகள் இம்முறையும் விழாவில் ஈடுபடுத்தப்படுவார்கள் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளை வேலணை உதவி அரசாங்க அதிபர் மேற்கொள்வார்.

விழாக்காலத்தில் குடிநீர் வழங்கலிற்கு நயினாதீவு பிரதேச சபைப் பொறுப்பாளர் பௌசர் வழங்க வேண்டுமெனவும் அந்த பௌசரை ஏற்றிச் செல்வதற்கான உழவு யந்திரத்தை அரசாங்கஅதிபர் வழங்குவார்.

இவ்வருடம்மேலதிகஇ.போ ச. பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என வட பிராந்திய போக்கு வரத்துச் சபை சாலை முகாமையாளர் கூறினார். அத்துடன் இரவு பஸ் சேவைகளும் நடாத்தும்படிஅவரிடம் கேட்கப்பட்டது.

சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகள் ஓடுவதற்கு தகுதியுடையதா என தகுந்த அதிகாரியிடம்உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

படகுகள் அறவிட வேண்டிய கட்டணங்கள் பற்றி வேலணை உதவி அரசாங்க அதிபர் தீர்மானிப்பார்.

சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகளில் பாதுகாப்பு உறைகள் முதலுதவிப் பெட்டிகள் வைத்திருக்கப்பட வேண்டும்.

ஜூன் மாதம் 26 ஆம்திகதி தொடக்கம் ஜூலை 8 ஆம் திகதி வரை மீன்பிடி வள்ளங்கள் குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து கணிசமான தூரத்திற்கப்பால் கட்டப்பட வேண்டும்,

திரு விழாக் காலத்தில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் யாத்திரிகர்கள் தாக சாந்திக்காக குடிநீர் வழங்கல் சம்பந்தமான நடவடிக்கைகளை வேலணை உதவி அரசாங்க அதிபர் எடுக்க வேண்டும் என்பனவே.

இக்கூட்டத்தில் பல்வேறு அரசாங்க நிறுவனங்களினதும் பொதுஸ்தாபனங்களினதும் பிரதிநிதிகளும் ஆலய அறங்காவலர் சபையினரும் கலந்து கொண்டனர். (22)

# தமிழ் ஒலிபரப்புக்கு ஏன் இந்தத் தடை?

ஆசிரியர்,
ஈழநாதம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போது கந்தளாய் அம்பாறை ஒலிபரப்பு நிலையங்கள் ஊடாக சிங்கள சேவைகளது நிகழ்ச்சிகள் தங்குதடையின்றி ஒலிபரப்பப் பட்டு வருகின்றது. ஆனால் அரசியல் சூனிய நிலைமைகள் காரணமாகவும் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்ற காரணங்களை கூறி ஸ்ரீலங்கா அரசு தமிழ்ஒலிபரப்புக்கு மட்டும் வட கிழக்கு மாகாணங்களில் தடை விதித்துவந்துள்ளது.

தற்போது நிலைமையில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோது கூட அரசு இது விடயத்தில் தனது கொள்கையை மாற்றியதாக தெரியவில்லை. இதேவேளை புத்தளம், பாலாவி ஒலிபரப்பினூடாக ஒலிபரப்பு செய்யப்பட்டு வந்த 'ஆசிய வர்த்தக சேவையும்' ஏப்ரல் மாத இறுதி வாரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

## மக்கள் மடல்

எனவே அரசு – புலிகள் பேச்சு வார்த்தைகளின்போது வடக்கு, கிழக்கில் சிங்கள ஒலிபரப்பு நிலையங்கள் செயல்படுவது போன்று யாழ்ப்பாணம், கந்தளாய் அம்பாறை ஆகிய இடங்களில் தமிழ் ஒலிபரப்பு நிலையங்களை நிறுவி தமிழ் நிகழ்ச்சிகளை கேட்க உரியவர்கள் ஆவன செய்வார்களா?

செல்வி மஹிஸா ஜின்னா
ஆஸாத்ஹோட்.

நிலவும் தட்டுப்பாடு காரணமாக புதிய இணைப்புக்கள், துண்டிக்கப்பட்ட இணைப்புக்கள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி தகவலை பிராந்திய தொலைத் தொடர்புகள் பொறியியலாளர் திரு. பி. 13,000 வயர்கள் உடனடியாக தேவை ஆனால் வயர்க்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் தான் வயர் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (37)

# 15 வருட கால ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை

(வந்தாறுமூலை)

ஐந்து வருடங்கள் அரசாங்க சேவையில் கடமை ஆற்றினால் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்பது அரசாங்க கொள்கை அமுல் படுத்தலில் அடங்கி உள்ளது.

ஆனால் செங்கலடி நீர்ப்பாசன திணைக்களத்தில் 15 வருடங்களாக கடமை ஆற்றி வருபவர்களை இதுவரையும் நிரந்தரம் ஆக்கவில்லை.

இதே வேளை வடக்கு கிழக்கு மாகாண சபையினால் மூன்று மாதமாக சேவையில் அமர்த்தப்பட்ட ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இந்த பாரபட்சமான நிலைமைக்கு யார் பொறுப்பு என்பதை அறிய இவ் ஊழியர்கள் அதிகாரிகளிடம்அலைந்து திரிகின்றனர்.

செங்கலடி நீர்ப்பாசன திணைக்களத்தில் லிகிதர்கள் சேவைக்கு நிரப்பப்படாமல் உள்ளது. இதே வேளை வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மேலதிகமாக ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான இளைஞர். யுவதிகள் வேலையற்று இருக்கும்போது இவ்வாறான திணைக்களங்களில் வெற்றிடங்களை நிரப்பப்படாமல் இருப்பது மிகவும் கவலை அடைய வேண்டிய விடயமாகும்.

# உத்தியோகத்தரை ஏற்றாத மட்டக்களப்பு பஸ் சேவை

மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனைக்கு செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்வண்டி அரசாங்க உத்தியோகஸ்தரை கவனத்தில் எடுக்காது சேவைஆற்றி வருகிறது.

இதனால் உரிய நேரத்துக்கு கடமைக்கு செல்ல முடியாது உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையீடு செய்தால் வாழைச் சேனை டிப்போ பஸ் வரட்டும் என கூறுகிறார்கள்.

மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் பஸ் செல்லும் நேர அட்டவணை இல்லாமல் இருக்கின்றது, இதனால் பிரயாணிகள் பெரும் இன்னல்களை அனுபவிப்பதாகவும் தெரிவித்தனர். (29)

## முத்துமாரி அம்மாள் பவனி

சூராவத்தை முத்துமாரிஅம்பாள் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் இரண்டு நாட்கள் பவனி வரவுள்ளாள்.

சனிக்கிழமையன்று விசேட பூசைகள் நடைபெறும். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப் படும்.

## புனரமைப்பு குழு கூட்டம்

(புங்குடுதீவு)

வேலணை உதவி ஆணையாளர் பிரிவு புனர்வாழ்வு புனரமைப்பு வழிநடத்தல் குழுவின் கூட்டம் இம்மாதம் 15-ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வேலணை உதவி ஆணையாளர் பணிமனையில் வேலணை உதவி ஆணையாளர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

ஈழநாதம்

## மட்டக்களப்பு புனர்வாழ்வு நிதி

# மோசடிகள் விசாரணையின் போது அதிகாரிகள் சமுகமளிக்கவில்லை

(கோட்டைமுனை)

1989 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட புனர் வாழ்வுக் கொடுப்பனவுகள் தொடர்பாக பலவித மோசடிகள் நடந்துள்ளனஇது கணக்காய்வாளர் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் மட்டத்திலும் கணக்காய்வாளர் மட்டத்திலும் இரண்டு வெவ்வேறு விசாரணைகள் நடத்தப்பட்டன என மட்டக்களப்பு மாவட்ட புனர் வாழ்வு நடவடிக்கைகளுக்கான தற்போதைய பணிப்பாளர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்,

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு ரீதியில் நடைபெற்ற மோசடிகள் தொடர்பாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் தொடர்பாக புதிய பணிப்பாளரிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டபோதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் இவ் விசாரணைகள் நடைபெறும் போது அப்போது புனர்வாழ்விற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் கடமைக்கு சமுகமளிக்கத் தவறியதில் இருந்து விசாரணைகள் முற்றுப் பெறாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டன எனவும். தெரிவித்தார்.

தற்போது புதிய புனர் வாழ்வு திட்டப் பணிப்பாளரினால் தொடர்ச்சியாக கொடுப்பனவுகளும், புனர் வாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் போது கடந்த காலச் சீர்கேடுகள் படிப்படியாக வெளிவருவதாகவும் அவை உடனுக்குடன் கணக்காய்வாளர் திணைக்கள மேலதிக பரிசீலனைக்குஅனுப்பிவைக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

## யாழ். குடாநாட்டில் முன்னணி பாடசாலைகளில் பிரெஞ்சு மொழி போதனை

(யாழ் நகர்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள முன்னணிப் பாடசாலைகளில்பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு பிரெஞ் - கலாசாரப் பிரிவின் யாழ்க் கிளை திட்டமிட்டுள்ளது.

தமிழ் மொழி ஊடாக பிரெஞ்சு மொழியை கற்பிக்கும் பகுதி நேர வகுப்புக்கள் இம் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உலகில் நூறு மில்லியன் மக்களுக்கு மேற்பட்டவர்களால் பேசப்படும் பிரெஞ்சு மொழி, இன்று கனடா, பெல்ஜியம் லக்ஸ்சம்பேக் சுவிர்ச்சர்லாந்து போன்ற நாடுகளின் அரச கரும மொழியாகவும் ஐ.நா.சபையின் நிர்வாக மொழிகளில் ஒன்றாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது

(52)

## நெடுந்தீவிலுள்ள ஒரே ஒரு

### ஜனசக்தி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய முதலீடு கட்டடம், வாகனம் போன்ற வசதிகள் இன்றியே இவை முன்னேற்றமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### சனசமூக

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.டிவகலாலா ஆகியோர் சிறப்புவிருந்தினராக கலந்துகொள்வர்.

முன்னாள் சமூகஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. த. ஆ. ரகுநாதன் சேவைநலன் பாராட்டு வைபவத்தில் விருது வழங்கி கௌரவிக்கப் படுவார் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (21)

## 100கிராம் பாண்உற்பத்திக்கு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் நூறுகிராம் பாண விற்பனையை அமுல் நடாத்த, உணவு கூட்டுறவு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த வாரம் முதல் இது ஒரு ரூபா இருபத்தைந்து சதத்துக்கு விற்கப்படவுள்தாக உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

இது முதலில் கொழும்பு நகரில் அமுல் செய்யப்பட்டு, பின்னர் நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதனைத் தயாரிக்க நட்டம் ஏற்படுவதாக சில பேக்கரிக்காரர்கள் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்தப் பாண் தயாரித்து விற்கும் பேக்கரிகளுக்கு அமைச்சு குறைந்த விலையில் மாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பாண் விலை அதிகரித்து வருவதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் சொன்னார்.

### தமிழ் போராளி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப் பார்ப்பதற்கு தம்முடன் வரத்தயாரா என்றும் கேட்டார்.

மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையேமோதலை ஏற்படுத்த சிலர் எண்ணி பொய் பிரசாரங்களைச் செய்கின்றனர் என்று கூறிய முதலமைச்சர் எந்த தீவிரவாத இயக்கத்தையும் தமிழ் நாட்டில் அனுமதிக்க மாட்டோம் எனவும் தெரிவித்தார்-

மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே மோதலை ஏற்படுத்த எண்ணுபவர்கள் மீது இந்திய பிரதமர் வி. பி. சிங் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

### ஒப்பந்தங்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவர்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு முந்திய இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரும் இந்த மண்ணில் பிறந்தவர்களே.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இந்நாட்டைச் சுரண்ட வரவில்லை. எத்தனையோ

### சாம் கொலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகின்றது. பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணைகளை நடாத்தி வருகின்றார்கள்.

கொழும்பில் எந்தவித அலுவல்களும் இல்லாது வசிப்பவர்களைக் கைது செய்யும்படி பாதுகாப்புஅமைச்சிடமிருந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் பெருந்தோட்ட அமைச்சரும், பாதுகாப்புஇராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரட்னா தெரிவித்துள்ளார். ஆயுதங்களுடன் எவரையும் வைத்திருக்கக் கூடாது என்று ஹோட்டல்கள், விடுதிகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள். இத்தகைய இடங்களில் ஆயுதங்களுடன் யாராவது காணப்பட்டால், அவற்றின் உரிமையாளர்களும் கைது செய்யப் படுவார்கள்.

பிந்திய சம்பவம் தொடர்பாக மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக பொலிஸார் புலன்விசாரணைகள் நடாத்தி

## தேனிசைச் செல்லப்பா சோர்வைப் போக்கி எழுச்சியை ஏற்படுத்தியவர்

(களுவாஞ்சிக்குடி)

நேற்றுமாலை ஆரயம்பதி மகாவித்தியாலய மைதானத்தில் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கரிகாலன் தலைமை தாங்க அம்பாறைப் பிராந்திய பிரதித் தளபதி றீகன் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். இவ் இசை நிகழ்ச்சி இறந்த போராளிகளுக்கான மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது.

தமிழ்மக்களின் உணர்ச்சி நரம்புகளை தமது குரல்வலிமையால் மீட்டியதாக எழுச்சியைத் தூண்டியவர் தேனிசைச் செல்லப்பா அவர்கள் என மட்டக்களப்பு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் விசு இவ்விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

தமிழ் மக்களையும் மண்ணையும் அடக்கி ஒடுக்கி அடிபணியச் செய்ய சிங்களஇராணுவம் முயன்றபோது அதற்கெதிரா தலைவர் பிரபாகரன் தமிழினத்தின் விடிவுக்காய் போரளிகளைத்திரட்டத் தொடங்கிய காலத்தில் தமது இனிய குரல் மூலம் சுதந்திரப் பாடல்களைப்பாடிபோராளிகளை திரட்ட உதவியவர் என இவ்விழாவிற்கு தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன் தெரிவித்தா.

மேலும் அவர் பேசும்போது சிறைகளில் நாம் பாடியபோது நிச்சயம் நாளை தமிழீழம் கிடைக்கும் எனப்பாடி எமது சோர்வைப் போக்கியதோடு, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் பாடல்களுக்கு உயிரூட்டியவர் தேனிசைச் செல்லப்பா எனவும் குறிப்பிட்டார்,

மேலும் நிகழ்ச்சியில் வி தலைப்புலிகள் கலாசாரப் பிரிவுப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை யாழ். மாவட்ட கலாசாரப்பிரிவு மகளிர் அணிப் பொறுப்பாளர் கீதா ஆகியோரும் பேசினர்.

## வங்கப்புயல் ஆந்திரக் கரையைக் கடக்கலாம்

(சென்னை)

வங்காளவிரிகுடாவில்உருவாகியுள்ள கடும்புயல் சென்னை நகருக்கு வட கிழக்கே 140 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளதாக இந்திய அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியின் கரையோரப்பகுதியில் மணிக்கு 120மைல் வேகத்திலும், ஆந்திரப்பிரதேச கரையோரப் பகுதியிலும் மணித்தியாலத்துக்கு 200 முதல் 230 மைல் வேகத்தில் புயல் காற்றி வீசும் எனவும் மக்களுக்கு எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் நாளை வியாழக்கிழமை வரையும் வீசக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் இடியுடன் மழை பெய்யக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் நேற்று பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதில் ஏற்பட்ட விபத்துக்களில் மூவர் மரணமானார்கள், எட்டுப்பேர் காயமடைந்தனர்.

சென்னை நகரில் மின்சாரக் கம்பிகள் அறுந்தபோது அதில் சிக்கிய இருவர் மரணமானார்கள்.

இராமேஸ்வரத்தில் இடிமின்னல் காரணமாக கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததால் அதில் சிக்கி எட்டுப் பேர் காயமுற்றனர்.

### மட்டக்களப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கான பிரயாணி

### தபால்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு இன்று அரசாங்க விடுமுறை தினமாக இருந்தும் தபால்கள் விநியோகம் செய்

வுள்ளன.

## நெடுந்தீவிலுள்ள ஒரே ஒரு பஸ் பழுதடைந்துள்ளது

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் சேவையிலீடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பஸ் கடந்த சில நாட்களாக பழுதடைந்துள்ளது.

இந்தபஸ் இங்கு பதினொரு கிலோ மீற்றர் தூரமுள்ள பிரதான பாதையில் சேவையாற்றி வந்தது.

இதனால் வைத்தியசாலை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தபாலகம்போன்றவற்றுக்குச் செல்லும் மக்கள் நடந்தும் மாட்டு வண்டில்கள் மூலமாகவும் தமதுபிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த பஸ் அடிக்கடி பழுதடைந்து வருவது குறித்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குப் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் உள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிப் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வெளிநாடுகளில் இருந்து வழங்கப்படும் நிதியுதவி மூலம் இங்கு சிறந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துமாறும் இங்குள்ள பொது ஸ்தாபனங்கள் அதிகாரிகளைக் கேட்டுள்ளன.

## மதிய உணவு இல்லை

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்டத்தில் பிரபல்யமான பாடசாலைகளில் ஒன்றான சென். ஜோன்ஸ் கல்லூரியில் இன்னமும் மதிய உணவு வழங்கப்படவில்லை

இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்னமும் மதிய உணவு வழங்கப்படவில்லை எனவும் தெரிகிறது. (43)

விருது வழங்கி கௌரவிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

### சாம்விட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சாம் தம்பிமுத்து செய்துவந்த பணியை அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து செய்வோம் என்றும் திரு. யோகசங்கரி சொன்னார்.

திரு. சாம் தம்பிமுத்து முதலில் கனடாவுக்கும் பின்னர் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் செல்லவும் சர்வதேச மன்னிப்புச் சபையினரையும் சந்திக்கவும் இங்கெல்லாம் வடக்கு கிழக்கு மாகாண நிலைபற்றி எடுத்துக் கூறவும் திட்டமிட்டிருந்தாரென்றும் திரு.யோகசங்கரி கூறினார்.

### கலாவுக்கு சுய நினைவு திரும்பியது

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட திருமதி கலா தம்பிமுத்து அவசர சத்திர சிகிச்சைக்குப்பின் நேற்றுப்பகல் மீண்டும் சுய நினைவு பெற்றார். கண்விழித்துப் பார்த்த அவர் ஆட்களை அடையாளம் காணக்கூடிய நிலையிலிருந்தார் ஆனால் வாய்திறந்து பேசக்கூடியநிலையிலிருக்கவில்லை. ஆபத்தான கட்டத்தை அவர் கடந்து விட்டாரென டாக்டர்கள் தெரிவித்தாலும் இன்னமும் அவர் தீவிர கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்.

மண்ணில் பிறந்தவர்களே.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இந்நாட்டைச் சுரண்டவரவில்லை. எத்தனையோ சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கும், இனப்படுகொலைகளுக்கும் மத்தியில் இந்த நாட்டை வளமாக்கிய மக்கள். இவர்கள் தாமாக விரும்பி இந்தியா செல்லவில்லை. இந்தியா செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இவர்களைத் திருப்பி அனுப்ப செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இந்த மக்களைக் கலந்து ஆலோசிக்காமல் செய்யப்பட்டவையே. ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் செயலிழந்து செத்துவிட்டது போலவே இந்தப் பழைய ஒப்பந்தங்களும் செல்லுப்படியாகாதவை.

இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த மக்களின் ஒரு பகுதியினரை இந்தியா செல்லுமாறு கட்டாயப்படுத்துவதை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என மேலும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ் எம்பிக்களுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

வேண்டுமென்றும் தனியார் வீடுகளிலும் விடுதிகளிலும் வந்து தங்கியிருப்பவர்கள் சோதனைக்குட்பட வேண்டி இருக்குமென்றும் திரு. ரஞ்சன் சொன்னார். கொழும்புக்கு வரும் வாகனங்களும் புதியவர்களும் சோதனைக்குள்ளாக நேரிடுமென்றும் அவர் கூறினார்.

பாக மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக பொலிஸார் புலன்விசாரணைகள் நடாத்தி வருவதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

### சிபார்சு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முழுவதும் உள்ளடக்கியதாக நியமனங்கள் வழங்கப்படும்போது தேசிய இன விகிதாசாரம் கவனத்திற்கு எடுக்கப்படும்.

பல்வேறு நபர்களிடமிருந்து சிபார்சுகளையும், கடிதங்களையும் பெற்று செல்வாக்கு பயன்படுத்துவதை தடுப்பதற்கு அரசாங்கம் தற்போது வழிவகைகளை ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறு சிபார்சுக் கடிதம் கொடுப்பவர்கள் மீதும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பது குறித்தும் அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறான சிபார்சுகள் தருவோர் தேர்தல்களில் போட்டியிடும் தகுதியை இழக்கநேரிடும்.

கடந்த நாற்பது வருடங்களாக இந்த முறை கைக்கொள்ளப்படடு வந்தது. அதற்கு முதல் இவ்வாறான தகுதி திறமைக்கே முன்னிடம் வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்களுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பேசியுள்ளோம்.

தரம் ஐந்துக்கான புலமை பரிசில்களின் எண்ணிக்கை ஐயாயிரத்தில் இருந்து இருபத்தையாயிரமாக அதிகரிக்கப்படும்.

ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஐந்தாந்தர மாணவர் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். எனவே புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையை மேலும் ஐம்பதினாயிரமாக அதிகரிக்க அமைச்சு எண்ணியுள்ளது.

மேலும் கிராமப்புற மாணவன் ஒருவன் றோயல் கல்லூரியில் அனுமதி பெறுவதற்கு எவ்வித தடையும் இருக்க மாட்டாது என நிருபர் ஒருவரின் கேள்விக்கு அமைச்சர் பதில் கூறினார்.

### மட்டக்களப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கான பிரயாணிகள் பெரிதும் அல்லல் பட நேர்ந்தது இதனால் பிரயாணிகள் தமக்கு பிரயாண ஒழுங்குகளைக் செய்து தருமாறு மட்டக்களப்பு விடுதலைப்புலிகள் காரியாலைத்தில் திரண்டிருந்தனர்

### நகர்ப்புற.

(1ஆம் பக்கத் தொடாச்சி)

ஆண்டுக்கான குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டுத்தேவையை பூர்த்தி செய்வதற்கான முதல் கட்டநடவடிக்கையாக இக்கடன்வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாகவும் அவர்தெரிவித்தார். (லோ)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு இன்று அரசாங்க விடுமுறை தினமாக இருந்தும் தபால்கள் விநியோகம் செய்யப்படும் என தபால் திணைக்கள உயர் அதிகாரி ஈழநாதத்துக்கு தெரிவித்தார்

### சிறுமி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புவம் சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது. நா, புஸ்பலதா (வயது 6) என்ற சிறுமியே பலியானவராவர் தாயார் சிறுமியை முகங்கழுவுவதற்காக கிணற்றடியில் விட்டு விட்டு வீட்டிற்கு வந்த சமயம் தவறி அவர் கிணற்றுக்குள் விழுந்து விட்டார். என்று மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. (தி)

## புதிய சோனக தெருப் பகுதிக்கு ஜனசக்தி கடன் வழங்கவில்லை

(யாழ்நகர்)

யாழ். புதியசோனக தெருப் பகுதிக்கு மூன்றுமாதங்களுக்கு முன்னதாகஅனுமதிக்கப்பட்ட ஜனசக்தி கடன்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இக்கடன்கள் சம்பந்தமாக புதிய சோனகதெரு ஜனசக்தி குழுக்கள் மூலம் விபரம் திரட்டப்பட்டு யாழ். உதவி அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து இக்கடன்கள் அறுபது பேருக்கு அனுமதிக்கப்பட்டு படிவங்களும் பூரணப் படுத்தப்பட்டன. யாழ். மக்கள் வங்கி பிரதான கிளைக்கு சிலர் அழைக்கப்பட்டு மேலும் சில தகவல்களும் பெறப்பட்டன.

ஆனால் இக்கடன்கள் இதுவரை வழங்கப் படாததனால் இப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஜனசக்தி குடும்பங்களுக்காகவே அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இவ்வாறான கடன்கள் ஏற்கனவே தென் இலங்கையில் வழங்கப்பட்டு உற்பத்தி முயற்சிகளும் தொடங்கப் பட்டுள்ளமை குறிப்பிடந் தக்கதாகும். (52)

## நிர்வாகத்தை பன்முகப்படுத்த பிரேமதாசா நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிர்வாகத்தை பன்முகப்படுத்துவதற்காக நாட்டில் உள்ள இருநூற்றி எழுபத்தொன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் தீவிரமாகச் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி பிரேமதாசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சருமான ரஞ்சன்விஜயரட்னா இவ்வாறு கூறினார்.

இதற்காக ஜனாதிபதி பிரேமதாசாஒவ்வொருமாவட்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள் மத்தியில் நிர்வாகத்தை பன்முகப்படுத்துவது குறித்து ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

இவ்வாறு ரஞ்சன் விஜயரட்னா தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் -09 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது·

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைச் சேர்ந்த, தற்பொழுது சாவகச்சேரியில் வசிக்கும் திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம் 8-5-90 இல் காலமானார். அன்னார் மு.க. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகேந்திரன் (செந்தில் அச்சகம், சாவகச்சேரி), மனோன்மணி (விவசாயப் போதனாசிரியை), தவமணி (ஆசிரியை, நம்புக்கணை), பராசக்தி (தாதி, தரம் - 1, கொழும்பு ஆஸ்பத்திரி) மகாதேவா (சட்டத்தரணி. குரும்பசிட்டி), சிவசக்தி, கிளி (சுவிஸ்), பரமேஸ்வரி (மிருக வைத்திய கந்தோர், சாவகச்சேரி). மனோகரன் (சுவிஸ்), மகேஸ்வரன் உரிமையாளர் K. V. M. றெக்கோடிங் ஸ்ருடியோ, (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகாம்பிகை. றெறன்ஸ் (பாதுகாப்பு மேற்பார்வையாளர். கொழும்பு), பவானி (ஆசிரியை, குரும்பசிட்டி); பத்மநாதன் (முகாமையாளர், K. V, M. றெக்கோடிக ஸ்ருடியோ), வசந்தகுமார் (சுவிஸ் , செகராசா (லிகிதர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை கொழும்பு), வதனி (சுவிஸ்), தவராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10-05-90 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் சாவகச்சேரி இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

2 வது கற்குழி ஒழுங்கை,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல் :
மு. க. வேலுப்பிள்ளை

R/463